பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம்

வருடாந்த அறிக்கை

2012

srilanka

WONDER OF ASIA

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம்

வருடாந்த அறிக்கை 2012

உள்ளடக்கம்

	பக்கம்
இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அதி மேதகு ஜனாதிபதியின் செய்தி	02
தொலைநோக்கும், பணிநோக்கும்	03
பொருளாதார அபிவிருத்தி அமைச்சரின் செய்தி	04
நிறுவன விபரம்	05
தலைவரின் செய்தி	06
முகாமைத்துவ சபை	07
முகாமைத்துவப் பணிப்பாளரின் செய்தி	08
புள்ளிவிபரவியல் பகுப்பாய்வு	10
சந்தைப்படுத்தல் மற்றும் ஊக்குவிப்புக்கள்	14
நிகழ்வுகள்	26
பொது உறவுகள் மற்றும் ஊடக பிரச்சாரம்	29
இலங்கை பற்றிய சர்வதேச சான்றுறுதிகள்	32
நிதி அறிக்கை	33
கணக்காய்வு அறிக்கை	44

அதி மேதகு மஹிந்த ராஜபக்ஷ
இலங்கை ஜனநாயக
சோசலிசக் குடியரசின் ஜனாதிபதி

"நான் சுற்றுலாத் துறைக்கு ஒரு துரித அபிவிருத்தி திட்டமொன்றை அறிமுகப்படுத்துவேன். 2016ஆம் ஆண்டுக்குள் வருடாந்தம் 2.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் உட்கட்டமைப்பு வசதிகளையும், ஏனைய தேவைகளையும் நிறைவேற்றுவதற்கான ஒரு நிகழ்ச்சித் திட்டத்தை நான் ஆரம்பிப்பேன்"

(மஹிந்த சிந்தனை 2010, பக்: 94)

தொலைநோக்கு

அழகிய கடற் கரைகளையும் மற்றும் சினேகபூர்வமான மக்களையும், மிகச் சிறந்த இயற்கையையும், கலாசாரத்தையும் கொண்டு சாகச முயற்சிகளுக்குரிய வாய்ப்புக்களை வழங்கும் ஆசியாவின் மிகவும் வளமிக்க, பசுமையான தீவாக இலங்கையை உருவாக்கி, ஆசியாவின் ஒரு சுற்றுலா சின்னமாக அதன் நற்பெயரை உயர்த்தி, சுற்றுலாத் துறையுடன் சம்பந்தப்பட்ட தரப்புக்களும், இலங்கை மக்களும் நன்மையடையக் கூடிய வெளிநாட்டு செலாவனியை கூடுதலாக ஈட்டித்தரும் நிலையமாக இலங்கையை மாற்றியமைத்தல்..

பணிநோக்கு

- மிகவும் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்து, மேம்படுத்தி, நிர்வகிக்கும் ஒரு வினையூக்கியாக இருத்தல்
- சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பில் கவனம் செலுத்தி, அவர்களை திருப்திப் படுத்துவதற்கும், மகிழ்விப்பதற்குமான ஓர் உயர்தரத்திலான உற்பத்தி மற்றும் சேவை பின்னணியை உருவாக்கி, மேம்படுத்தல்
- சுற்றுலாத் துறையின் முதலீடுகளை நிலைநிறுத்தி, வளர்ச்சியடையும் வகையில் சுற்றுலாப் பயணிகளின் அளவு மட்டத்தையும், அவர்கள் மூலமான வருவாயையும் உறுதிப்படுத்தல்
- சாத்தியமிக்க வாடிக்கையாளர்கள் மத்தியில் இலங்கையை ஒரு உயர்ந்த அடைவிடமாக மாற்றி சுற்றாடலுக்கு சினேகபூர்வமான ஒரு சுற்றுலா பூமியாகவும், ஒரு வளமிக்க தீவாகவும் இலங்கையை நிலைநிறுத்துதல்..
- தொழில்வாண்மைத்துவ அபிவிருத்தி, திறன் அபிவிருத்தி மற்றும் பயிற்சிகள் மூலமாக சுற்றுலாத் துறையில் நிலவும் மனிதவளத் தேவைகளை நிறைவேற்றுதல்
- இலங்கையின் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்து மேம்படுத்துவதற்காக முறைசார்ந்த மற்றும் முறைசாராத தொழிற் துறைகளிலும், இந்தத் துறைக்குள்ளேயும், வெளியேயும் உள்ள அனைத்து பங்குதாரர்களையும் உள்வாங்குதல்
- இலங்கை மக்களின் பயணத் தேவைகளுக்கு மிகச் சிறந்த முறையில் சேவையாற்றுவதற்காகவும், சர்வதேச சுற்றுலாத் துறையை ஊக்குவிப்பதற்கு உதவி செய்வதற்காகவும் உள்நாட்டு சுற்றுலாத் துறையை விரிவுபடுத்தல்

“சமாதானம் உருவாக்கப்பட்டதன் பின்னர் பிரமிப்பூட்டும் வகையில் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் இலங்கையில் சுற்றுலாத் துறையானது பொருளாதாரத்திற்கு சிறந்த பங்களிப்புக்களை வழங்கி வருகின்றது என நான் நம்புகின்றேன். உட்கட்டமைப்பு வசதிகளையும், மனித வளங்கள் மற்றும் சேவைகளின் தரத்தையும் விருத்தி செய்வதற்கு நான் முயற்சி செய்து வருகின்றேன். இதற்கு மேலதிகமாக, இந்த அனைத்து முயற்சிகள் ஊடாகவும் மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கை யதார்த்தபூர்வமாக்குவதே எனது உச்சகட்ட விருப்பமாகும். 2016ஆம் ஆண்டளவில் 2.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை கவருவதே எமது தொலை நோக்கமாகும்.”

கௌரவ. பாராளுமன்ற உறுப்பினர் பசில் ராஜபக்ஷ
பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்

“சுற்றுலா அபிவிருத்தி மூலோபாயம் 2011-2016” திட்டத்தை உயர்ந்தபட்ச அளவில் அமுல்படுத்தியுள்ளதன் மூலம் சுற்றுலாத் துறையானது அன்னியச் செலாவனி பரிமாற்றம் ஊடாக ஈட்டப்பட்டுள்ள வருமானத்தில் 23.6 சதவீத வளர்ச்சியை காட்டியுள்ளது. 2012ஆம் அண்டு டிசம்பர் மாதத்திற்குள் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1 மில்லியன் மக்களையும் தாண்டியிருந்தது. இதனால், 1.038 பில்லியன் அமெரிக்க டொலர்களை இந்தத் துறை வருமானமாக ஈட்டிக் கொண்டது. 46 வருடகால சுற்றுலாத் துறை வரலாற்றில் முன்னெப்போதும் அடையப் பெறாத வளர்ச்சியாக இது பதிவாகியுள்ளது.

பிரதானமாக ஒரு சேவைத் துறையாக செயற்பட்டு சுற்றுலாத் துறையானது 2013ஆம் ஆண்டில் 1.3 மில்லியன் சுற்றுலாப் பயணிகளின் வருகையையும், 2016ஆம் ஆண்டிற்குள் 2.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளின் வருகையையும் எதிர்பார்க்கின்றது. சுற்றுலாப் பயணிகளின் வருகையை வருடா வருடம் 17.5 சதவீதத்தால் அதிகரிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது. 2012ஆம் ஆண்டின் நிறைவில் 1,005,605 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்திருந்தார்கள். இது யதார்த்தபூர்வமான அடையக்கூடிய ஒரு இலக்காக கருதப்படுகின்றது.

ஒருமைப்பட்டுள்ள ஒரு நாட்டுக்குள் மிகவும் துரிதமாக வளர்ச்சி கண்டுவரும் சுற்றுலாத் துறையிலிருந்து கிடைக்கும் பல நன்மைகளும், வாய்ப்புக்களும் இலங்கை மக்களுக்கு நன்மை பயக்க வேண்டும் என்பதை பொருளாதார அபிவிருத்தி அமைச்சு இனங்கண்டுள்ளது. துளிர்விடும் உள்நாட்டு தொழில்முயற்சியாளர்களுக்கான புதிய தொழில் வாய்ப்புக்களாகவும், உள்ளூர் மக்களுக்கு பயனளிக்கும் உட்கட்டமைப்பு அபிவிருத்திகளாகவும், ஏனைய நேரடி மற்றும் மறைமுக அனுகூலங்களாகவும் இந்த நன்மைகள் அமைந்துள்ளன.

தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள உறுதிமிக்க மூலோபாயங்களின் அடிப்படையிலும் துறைசார்ந்த அனைத்து தரப்புக்களிடத்திலும் சுற்றுலாத் துறை தொடர்பில் தோன்றியுள்ள பெறுமதியின் அடிப்படையிலும் எதிர்காலத்தில் வெளிநாட்டு செலாவணியை உழைக்கும் முன்னணி துறையாக மாற்றியமைக்கும் வகையில் சுற்றுலாத் துறையின் வளர்ச்சியை தொடர்ந்தும் பேணுவதற்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சு எதிர்பார்த்துள்ளது.

நிறுவன விபரம்

பெயர்: இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் (இ.சு.ஊ.ப)

சட்டரீதியான அமைப்பு: 2005ஆம் ஆண்டு 38ஆம் இலக்க சுற்றுலா சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ள நியாயாதிக்க அமைப்பு. 2005ம் ஆண்டு 38ம் இலக்க புதிய சுற்றுலா சட்டம் 2007ம் ஆண்டு ஒக்டோபர் முதலாம் திகதி அமுலுக்கு வந்தது. 38ஆம் இலக்க சுற்றுலா சட்டத்தின் உறுப்புரை 67 (1) இற்கு அமைய, 1966ம் ஆண்டு 10ம் இலக்க இலங்கை சுற்றுலா சபை சட்டம் அகற்றப்பட்டது. இலங்கை சுற்றுலா சபையின் தொழிற்பாடுகள் 2007ம் ஆண்டு செப்டம்பர் 30ம் திகதி அமுலுக்கு வரும் வகையில் நிறுத்தப்பட்டன.

நாட்டின் இலச்சினையும், குறிச்சொல்லும்: srilanka WONDER OF ASIA

அலுவலகங்கள்: தலைமையக அலுவலகம் இலக்கம் 80, காலி வீதி, கொழும்பு 03 என்ற முகவரியில் அமைந்துள்ளது. (சுற்றுலாத் தகவல் மையங்கள் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்க, கண்டி மற்றும் சீகிரியா ஆகிய இடங்களில் உள்ளன)

கணக்காய்வாளர்கள்: இலங்கை கணக்காய்வாளர் நாயகம்

வங்கியாளர்: இலங்கை வங்கி

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தின் வகிபங்கு: கீழ் வரும் விடயங்களில் கவனம் செலுத்தி இலங்கை சுற்றுலாத் துறை அனுபவங்களுக்கான நிலையான சர்வதேசக் கேள்வியை ஊக்குவித்து, சுற்றுலாத் துறையுடன் சம்பந்தப்பட்ட தரப்புக்களுக்கும், இலங்கை பொருளாதாரத்திற்கும் பொருளாதார பயன்களை வழங்குவதோடு , சுற்றுலாத் துறையின் உற்பத்தி விநியோகத்தில் இலங்கை சுற்றுலாத் துறையை தூண்டி, வழிகாட்டி ஆதரவு வழங்குதல்.

- ஒரு தெளிவான சுற்றுலா அடைவிட சந்தைப்படுத்தல் மூலோபாயத்தை உருவாக்கி அதில் வெற்றியடைதல்
- மூலோபாய ரீதியில் போட்டித்தன்மைகளில் இருந்து வேறுபடும் கட்டாய அடைவிட குறியீடொன்றை வெளிப்படுத்தி ஊக்குவித்தல்
- பாரம்பரிய முறையிலும், இணையதளம் வாயிலாகவும் விநியோக வலையமைப்பில் ஈடுபட்டு ஆதரவளிப்பதன் மூலம் உழைப்பு நோக்கங்களையும், வெளிநாட்டவர் வருகையையும் அடைந்து கொள்வதற்காக விற்பனைகளுக்கு துணைபுரிதல்
- இலக்கு நிர்ணயிக்கப்பட்ட சந்தைப் பிரிவுகளின் தேவைகள் மற்றும் எதிர்ப்பார்ப்புக்களில் கவனம் செலுத்தி இலங்கை சுற்றுலாத் துறையின் பிரத்தியேக அனுவபங்களின் அபிவிருத்தியை இனங்கண்டு அதற்கு ஆதரவளித்தல்
- இலங்கை சுற்றுலா உற்பத்திகளும், சேவைகளும் அதேபோல் அதன் அனைத்து மூலக்கூறுகளும் அதன் அடையாளத்தை தொடர்ந்தும் தக்க வைக்கின்றது என்பதை உறுதிப்படுத்தல்
- தீர்மானம் மேற்கொள்வதற்காக பிரதான நுண்ணறிவுகளையும், நடைமுறைப் போக்குகளையும் திரட்டி மாறுபடும் சர்வதேச சுற்றுலாத் துறைப் பின்னணியை கண்காணித்து அவற்றை சுற்றுலாத் துறை சார்ந்தவர்களுக்கு வழங்கி வர்த்தகத் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தியில் அவற்றை பயன்படுத்த உதவுதல்
- நிறுவனத்தின் இலக்குகளை அடைவதற்கு துணைபுரியும் நிறுவனங்களுடன் நெருக்கமாக இணைந்து செயற்படுதல்

பணியகத்தின் நோக்கங்கள்:

- இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் ஆலோசனையுடன் முன்னெடுக்கப்படும் சுற்றுலா அபிவிருத்தி திட்டத்திற்கு அமைய இலங்கையை நேரடியாகவும், மறைமுகமாகவும் தரமான ஒரு சுற்றுலா மற்றும் பயண அடைவிடமாக சந்தைப்படுத்தி ஊக்குவித்தல்
- இலங்கையை தெற்காசியப் பிராந்தியத்திற்கான ஒரு நுளைவாயிலாக ஊக்குவித்தல்
- பிராந்தியத்தில் சுற்றுலா முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தியில் மிகச் சிறந்த இடமாக இலங்கையை மாற்றியமைத்தல்

தலைவரின் செய்தி

அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் ஆசிர்வாதத்துடனும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ அவர்களின் வழிகாட்டலுடனும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் திரைசேரியின் செயலாளர் பீ.பீ. ஜயசுந்தர அவர்களின் நெறிப்படுத்தலின் கீழும் 2012ஆம் ஆண்டு இலங்கை சுற்றுலாத் துறை மிகப் பெரிய பெருமையுடன் ஒரு மைல் கல்லை தாண்டிய வருடமாக திகழ்ந்தது. அந்த வருடத்தில் ஒரு மில்லியனையும் தாண்டி 1,005,605 சுற்றுலாப் பயணிகள் எமது நாட்டுக்கு வருகை தந்திருந்தார்கள். சுற்றுலாத் துறை மற்றும் இலங்கை பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு இதன் மூலம் பங்களிப்புச் செலுத்த முடிந்திருப்பதானது ஒரு பெரிய கௌரமாக அமைந்துள்ளது என்று இலங்கை சுற்றுலாத் துறையைச் சேர்ந்த நாம் கருதுகிறோம்.

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் சுற்றுலா மூலோபாயத்தை அமுல்படுத்துவதற்கும், அரசாங்கத்தின் நோக்கங்களை நிறைவேற்றி அதன் மூலம் இலங்கை பிரஜைகளின் விருப்பங்களை நிவர்த்தி செய்வதற்கும் கடமைப்பட்டுள்ளது.

2016ஆம் ஆண்டுக்குள் வெளிநாட்டு செலாவணியை ஈட்டும் மிகப் பெரிய துறையாக சுற்றுலாத் துறையை மாற்றியமைக்கும் அரசாங்கத்தின் நோக்கத்திற்கு துணைபுரியும் வகையில், இலங்கை சுற்றுலத் துறை 2012 ஆம் ஆண்டில் 1.038 பில்லியன் அமெரிக்க டொலர்களை வருமானமாக ஈட்டியுள்ளது. இது 23.6 சதவீத வருடாந்த வளர்ச்சியாகும்.

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் அதன் செயலாற்றுகைக்காக பல பிரபல அமைப்புக்களின் உயர் பாராட்டை பெற்றுள்ளது.

2016ம் ஆண்டுக்குள் 2.5 மில்லியன் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை கவரும் நோக்குடன் பல உட்கட்டமைப்பு மற்றும் வசதியளிப்பு அபிவிருத்தி செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதற்கமைய, இந்த துறைக்குள் நிர்ணயிக்கப்பட்ட மூலோபாயங்கள் மற்றும் தெளிவான வழிகாட்டலுக்கு அமைய சாதகமான மாற்றம் காணப்பட்டுள்ளது என்பதைக் குறிக்கும் வகையில் சுற்றுலாப் பயணிகளுக்கு கிடைக்கக் கூடிய ஹோட்டல் அறைகளின் எண்ணிக்கை 5.68 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

2011ம் ஆண்டுடன் ஒப்பிடும் போது சுற்றுலாப் பயணிகளின் வருகை 17.5 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. சுற்றுலாத் துறை உறுதியான குறிக்கோளை நோக்கியும், போட்டித் தன்மையை எதிர்கொண்டு, எதிர்காலத்தில் பாரிய முன்னேற்றங்களை அடைவதற்கு ஏற்ற விதத்தில் பயணிக்கின்றது என்பதை இது உறுதிப்படுத்துகின்றது.

இறுதியாக, சுற்றுலாத் துறையின் பயன்கள் பொது மக்களுக்கு கிடைக்க வேண்டும் என்பதையும், இந்த துறை நாட்டின் சுற்றாடல் அல்லது சமூக விழுமியங்களில் தாக்கத்தை ஏற்படுத்த முடியாது என்பதையும் சுற்றுலாக் கொள்கை எடுத்துக் காட்டுகின்றது. அதனால், சுற்றுலாத் துறையின் அபிவிருத்திக்காக முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளும் அனைத்து செயற்பாடுகளின் மையப் பகுதியில் உள்ள முக்கிய மூலக் கூறுகளாக கருதப்படுகின்றன.

விரும்பும் தரநியமங்களையும், இலக்குகளையும் அடைவதற்காக தொடர்ந்தும் பாடுபட்டு, சுற்றுலாத் துறையுடன் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்புக்களுடனும் இணங்கி செயற்படுவதன் மூலம் இலங்கையை ஆசியாவின் ஆச்சரியமிக்க நாடாக மாற்றியமைத்து இந்தத் துறையின் வளர்ச்சிக்கு ஆதரவளிக்க கூடியதாக இருக்கும் என்று நாம் உறுதியாக நம்புகின்றோம்.

பாஷ்வர சேனாங்க குணரத்ன

முகாமைத்துவ சபை

சீரேஷ்ட முகாமைத்துவம்

பதவி	பெயர்	தற்போதைய பதவியில் சேவையாற்றும் காலம் - ஆரம்ப மற்றும் முடிவுத் திகதி
தலைவர்	டொக்டர். நாலக்க கொடஹேவா	ஜூன் 2010 – மே 2012
தலைவர்	தலைவர் திரு. பீ.எஸ். குணரத்ன	ஜூன் 2012 – டிசம்பர் 2012
முகாமைத்து பணிப்பாளர்	திரு. ரூமி ஜவ்பர்	மே 2011- டிசம்பர் 2012
பணிப்பாளர் - சந்தைப்படுத்தல்	செல்வி. மதுபானி பெரேரா	ஜனவரி 2008- டிசம்பர் 2012

முகாமைத்துவ சபை

பதவி	பெயர்	தற்போதைய பதவியில் சேவையாற்றும் காலம் - ஆரம்ப மற்றும் முடிவுத் திகதி
தலைவர்	டொக்டர். நாலக்க கொடஹேவா	ஜூன் 2010 – மே 2012
தலைவர்	திரு. பீ.எஸ். குணரத்ன	ஜூன் 2012 – டிசம்பர் 2012
சபை உறுப்பினர்	டொக்டர். பீ.எம்.எஸ்.பட்டகொட	ஜூன் 2012 – டிசம்பர் 2012
சபை உறுப்பினர்	திரு. எம்.கே.பி.திசாநாயக்க	ஜூன் 2012 – ஜூலை 2012
சபை உறுப்பினர்	திரு. நில்மின் நாணயக்கார	ஜூலை 2010 – டிசம்பர் 2012
சபை உறுப்பினர்	திரு. மேர்வின் பெர்னாந்து பிள்ளை	ஜூலை 2010 – டிசம்பர் 2012



முகாமைத்துவப் பணிப்பாளரின் மீளாய்வு

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தின் 2012ம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையை உங்களின் கவனத்திற்காகவும், தகவலுக்காகவும் முன்வைப்பதையிட்டு நான் மகிழ்ச்சியும், பெருமையும் அடைகின்றேன்.

2012ம் ஆண்டு என்பது இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை ஒரு மில்லியன் வரை அடைந்து சுற்றுலாத் துறை வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டியுள்ள ஆண்டாகும். 2011ம் ஆண்டுடன் ஒப்பிடும் போது இது 17.5 என்ற ஆரோக்கியமான வளர்ச்சியை காட்டுகின்றது. படிப்படியாக வளர்ச்சி கண்ட சுற்றுலாத் துறையில் பல சாதனைகளையும், வளர்ச்சியையும் பதிவு செய்த காலப் பகுதியாகவும் இந்த வருடத்தை கருதலாம்.

2011ம் ஆண்டுடன் ஒப்பிடும் போது இந்த வருடத்தில் தனியார் துறை பயண முகவர் அமைப்புக்களுடனும், ஹோட்டல் உரிமையாளர்களுடனும் இணைந்து பயண மற்றும் வியாபார சந்தைகளில் கூடுதலாக பங்கேற்றுள்ளோம். மேலும், செயற்திறனாக பங்களிப்புச் செய்யும் சுற்றுலாத் துறையின் பாரம்பரிய துறையிலும், முன்னெப்போதும் இல்லாத இந்த வளர்ச்சியின் பயன்களை பெற்றுக் கொள்வதிலும் ஒரு முன்னேற்றத்தைக் கண்டோம்.

அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் ஆசிர்வாதத்துடனும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ அவர்களின் தலைமைத்துவத்துடனும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் திரைசேரியின் செயலாளர் பீ.பீ. ஜயசுந்தர அவர்களின் நெறிப்படுத்தலின் கீழும் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

2012ஆம் ஆண்டின் நடுப் பகுதியை கவனித்தால், இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தின் தலைவராக திரு. பாஷ்வர சேனாங்க குணரத்ன நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தில் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டது. இவரின் கீழ், ஊக்குவிப்பு மற்றும் சந்தைப்படுத்தல் திட்டம் மீள வகுக்கப்பட்டதோடு, 2012ஆம் ஆண்டின் நிறைவுப் பகுதியிலும், 2013ம் ஆண்டிலும் நிறைவேற்றுவதற்கான மேலும் பல நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டன.

சர்வதேச நாடுகளில் இருந்து வருகை தந்த ஊடகவியலாளர்களுக்கான நிகழ்ச்சியின் ஊடாக ஒரு குறிப்பிடத்தக்க பிரச்சாரம் பெற்றுக் கொள்ளப்பட்டது. 2011ம் ஆண்டில், பிரச்சாரம் செய்வதற்காக 500.9 மில்லியன் ரூபா (3.8 அமெரிக்க டொலர்கள்) பெறுமதியான ஊடக அனுசரணை பெற்றுக் கொள்ளப்பட்டது. 2012ஆம் ஆண்டில் இது 676 மில்லியன் ரூபாவாக (5.1 அமெரிக்க டொலர்கள்) அதிகரித்தது. இலங்கையின் அடைவிடங்களை பார்வையிடுவதற்காக பல ஊடகவியலாளர்களை வெற்றிகரமாக ஒழுங்குபடுத்தவும் முடிந்தது.

இலங்கை சுற்றுலாத் துறைக்கான மிக முக்கியமான சான்று உறுதிதான் 2013 பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டையும், ஐ.சீ.சீ உலகக் கிண்ண டுவன்டி டுவன்டி போட்டியையும் நடத்துவதற்கான உபசரனை நாடாக இலங்கையின் பெயர் அறிவிக்கப்பட்டதாகும். முன்னணி சஞ்சிகைளும், தரப்படுத்தல் முகவரமைப்புக்களும் வெளியிட்ட அடைவிடங்கள் சம்பந்தப்பட்ட குறிப்புக்கள் இலங்கையின் நன்மதிப்பிற்கும் நற்பெயருக்கும் பங்களிப்புச் செலுத்துகின்றன. அதேபோல், நாட்டை அடையாளப் படுத்துவதில் ஒரு முக்கிய பங்களிப்பை செலுத்தியது.

அனைத்திற்கும் மேலாக 2012ம் ஆண்டு காலப் பகுதியானது சுற்றுலாத் துறைக்கான மிகவும் வெற்றிகரமான காலப் பகுதியாக விளங்கியது. நான் அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்கும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ அவர்களுக்கும், வெளிவிவகார அமைச்சுக்கும், தகவல் மற்றும் வெகுசன ஊடக அமைச்சுக்கும், இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தின் தலைவர் திரு. பாஷ்வர சேனாங்க குணரத்னவுக்கும், இலங்கை தூதரகங்கள் மற்றும் உயர்ஸ்தாணிகராலயங்களுக்கும், இலங்கை கிரிக்கட் சபை, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், மிஹின் எயார், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை, மத்திய கலாசார நிதியம், உள்ளக சுற்றுலா தொழிற்பாட்டாளர்களின் இலங்கை சங்கம், இலங்கை ஹோட்டல் உரிமையாளர்கள் சங்கம், சுற்றுலாத் துறையின் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் சங்கம் மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய தரப்பினருக்கும் நான் நன்றி தெரிவிக்கின்றேன்.



ரூமி ஜவ்பர்

புள்ளிவிபரவியல் பகுப்பாய்வு

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம்

2012 ஆம் ஆண்டின் நிறைவுப் பகுதிக்குள் 925,000 சுற்றுலாப் பயணிகளை கவருவதற்காக நிர்ணயிக்கப்பட்டிருந்த இலக்கையும் தாண்டி 2012ம் ஆண்டில் இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1,005,605 ஆக காணப்பட்டது. இது 2011ம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 17.5 சதவீத வளர்ச்சியாகும்.

2012ம் ஆண்டில் மாதாந்தம் சுற்றுலாப் பயணிகளின் வருகை

மாதம்	2011	2012	வளர்ச்சி % 2011/2012
ஜனவரி	74,197	85,874	15.7
பெப்ரவரி	65,797	83,549	27.0
மார்ச்	75,130	91,102	21.3
ஏப்ரல்	63,835	69,591	9.0
மே	48,943	57,506	17.5
ஜூன்	53,636	65,245	21.6
ஜூலை	83,786	90,338	7.8
ஓகஸ்ட்	72,463	79,456	9.7
செப்டம்பர்	60,219	71,111	18.1
ஒக்டோபர்	69,563	80,379	15.5
நவம்பர்	90,889	109,202	20.1
டிசம்பர்	97,517	122,252	25.4



2012 டிசம்பர் 31ம் திகதி வரை வருகை தந்த முன்னணி சுற்றுலாப் பயணிகளைக் கொண்ட 15 நாடுகள்

இல.	நாடு	ஜன-டிசம் 2011	ஜன-டிசம் 2012	வளர்ச்சி % 2011/2012
1	இந்தியா	171,374	176,340	2.9
2	இலன்டன்	106,082	114,218	7.7
3	ஜேர்மனி	55,882	71,642	28.2
4	பிரான்ஸ்	48,695	56,863	16.8
5	மத்திய கிழக்கு	56,330	56,169	-0.3
6	அவுஸ்திரேலியா	41,728	51,614	23.7
7	மாலைதீவு	44,018	47,572	8.1
8	கனடா	24,671	29,329	18.9
9	அமெரிக்கா	24,386	29,907	22.6
10	நெதர்லாந்து	23,966	26,754	11.6
11	ஜப்பான்	20,586	26,085	26.7
12	ரஷ்யா	21,385	28,402	32.8
13	சீனா	16,308	25,781	58.1
14	மலேஷியா	16,094	21,776	35.3
15	சுவிற்சலாந்து	14,110	20,054	42.1



சுற்றுலா வளங்கள் விருத்தி செயற்திட்டம் - ஜப்பான்

பொருளாதார அபிவிருத்தி அமைச்சும், இலங்கை அரசாங்கமும் ஜப்பான் சர்வதேச கூட்டுறவு முகவரமைப்பின் (ஜய்க்கா) உதவியுடன் சுற்றுலா வளங்கள் விருத்தி செயற்திட்டத்தை அமுல்படுத்த ஆரம்பித்தது. இந்த செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த நோக்கம் யாதெனில் மக்களின் வருமான மட்டத்தை அதிகரிப்பதும், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை குறிப்பாக ஜப்பான் சுற்றுலாப் பயணிகளை கவர்வதன் மூலம் சுற்றுலாத் துறையில் வருமான வாய்ப்புக்களையும், வெளிநாட்டுச் செலாவணியையும் அதிகரித்து வறுமையை குறைப்பதே ஆகும். இந்த செயற்திட்டத்தின் கீழ், சுற்றுலா சந்தைப்படுத்தல் மற்றும் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டம் ஜப்பானிய சந்தை மீது கவனம் செலுத்தி அமுல்படுத்தப்படுகின்றது. இந்த நிகழ்ச்சித் திட்டம் ஜப்பானிய சுற்றுலாப் பயணிகளை கவருவதற்காக ஜப்பானில் சந்தைப்படுத்தல் மற்றும் ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் என்பது சந்தைப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்தும் ஒரு முகவரமைப்பாகும். சுற்றுலா அடைவிடங்களை சந்தைப்படுத்தும் செயற்பாடுகள் நிஹொன் கெய்சை அட்வர்டைசிங் கம்பனியினால் (எடக்ஸ்) அமுல்படுத்தப்பட்டன. அனைத்து சந்தைப்படுத்தல் நிகழ்ச்சிகளும் ஜப்பானிலுள்ள இலங்கைத் தூதரகத்தினால் கண்காணிக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உள்ளடங்கும் துறைகள் கீழ்வருமாறு..

1. இணையதள சந்தைப்படுத்தல்
2. பாவனையாளர்களை இலக்காகக் கொண்ட விளம்பர நடவடிக்கைகள்
3. நிகழ்ச்சி ஊக்குவிப்பு (அறிமுக சுற்றுப்பயணங்கள்)
4. ஊடகம் சார்ந்த செயற்பாடுகள்
5. பயண முகவர் அமைப்புக்களுக்கான ஊக்குவிப்பு நடவடிக்கைகள்
6. பிரேரனை அடிப்படையிலான சந்தைப்படுத்தல் மற்றும் ஊக்குவிப்பு நடவடிக்கை (விழிப்புணர்வை ஏற்படுத்தல்)

சந்தைப்படுத்தல் மற்றும் ஊக்குவிப்புக்கள்

வியாபார மற்றும் பயணச் சந்தைகள்

நாடு	நிகழ்ச்சி/ஊக்குவிப்பு	திகதி
	ஜனவரி	
நெதர்லாந்து	வேக்கண்டிபியுரஸ் பயணக் கண்காட்சி	ஜனவரி 10-15
ஓஸ்ரியா	பேரியன் பயணக் கண்காட்சி	ஜனவரி 12-15
ஜேர்மனி	CMT ஸ்டகார்ட் யாழ் சர்வதேச பயணக் கண்காட்சி	ஜனவரி 14-22 ஜனவரி 20-22
ஐக்கிய இராச்சியம்	விடுமுறை மற்றும் பயண கண்காட்சி, மென்சஸ்டர் (நுகர்வோர் கண்காட்சி) ஆயுபோவன் சைனா" - சீன புதுவருட கொண்டாட்டங்கள்- கலாசார நிகழ்ச்சிகள், இலங்கை பாரம்பரிய நடனம், இசை செயலாற்றுகை, உணவுத் திருவிழா ஐ.நா.உ.சு.அமைப்பின் உதவியுடன் சீனாவின் வெளிவாரி சுற்றுலாத் துறை தொடர்பான கருத்தரங்கு	ஜனவரி 20-22 ஜனவரி 28 மார்ச் 30
	பெப்ரவரி	
பெல்ஜியம்	ப்ரஸல்ஸ் ஹொலிடே கண்காட்சி	பெப்ரவரி 02-06
செக் குடியரசு	ஹொலிடே வேல்ட் பயணக் கண்காட்சி	பெப்ரவரி 09-12
இத்தாலி	பிட் பயணக் கண்காட்சி, மிலான்	பெப்ரவரி 16-19
இந்தியா	OTM பயணக் கண்காட்சி – மும்பாய்	பெப்ரவரி 17-19
இந்தியா	OTM பயணக் கண்காட்சி – டில்லி	பெப்ரவரி 23-24
பிரான்ஸ்	சலுன் நேச்சர் (நுகர்வோர் கண்காட்சி)	26 பெப் - 3 மார்ச்
ஜப்பான்	இலங்கை சுற்றுலாத் துறைக்காக ஜப்பானிய மொழியில் ஒரு இணையதளம் உருவாக்கப்பட்டமை	பெப்ரவரி
	மார்ச்	
அமெரிக்கா	நியுயோர்க் டைம்ஸ் பயணக் கண்காட்சி	மார்ச் 02-04
ஜேர்மனி	ITP பயணக் கண்காட்சி, பேர்லின்	மார்ச் 07-11
ரஷ்யா	MITT பயணக் கண்காட்சி, மொஸ்கோ	மார்ச் 16-19
சீனா	குவன்சோ சர்வதேச பயணக் கண்காட்சி	மார்ச் 07-09
சீனா	ஷென்சன் மற்றும் குவன்சோவில் சாலைக் காட்சி	மார்ச் 06ம், 10ம் திகதிகளில்
சுவீடன்	TUR பயணக் கண்காட்சி	மார்ச் 22-25
யுக்ரேன்	UTTT பயணக் கண்காட்சி	மார்ச் 28-30
ஜப்பான்	பயண முகவர்களுக்கு டோக்கியோவில் கருத்தரங்கு	மார்ச் 09
ஜப்பான்	பயண முகவர்களுக்கு ஒசாக்காவில் கருத்தரங்கு	மார்ச் 26
ஜப்பான்	பயண முகவர்களுக்கு நாகொயாவில் கருத்தரங்கு	மார்ச் 27
	ஏக்ஸ்போ 2012 – சுற்றுலா பொது மன்றம்	
	முகவரமைப்புக்களின் அறிமுக சுற்றுப் பயணம் கொரியா/ஜோதான்/ஓமான்/சீனா/சிங்கப்பூர்/சவுதி அரேபியா/இத்தாலி /தோஹா கட்டார்/இந்தியா/இந்தோனேசியா/அமெரிக்கா/மலேஷியா	மார்ச் 28- ஏப்ரல் 1

ஏப்ரல்		
கஸகஸ்தான்	KITF பயணக் கண்காட்சி	ஏப்ரல் 25-27
ஜப்பான்	கடல் சுழியோடல் பயணக் கண்காட்சி	ஏப்ரல் 06-08
ஜப்பான்	கொபேயில் பயண முகவரமைப்புக்களுக்கான செயலமர்வு	27 ஏப்ரல்
மே		
ஐ.அர.இராச்சியம்	அரேபியன் ட்ரவல் மார்ட் (ஏ.ரீ.எம்)	ஏப்ரல் 30- மே 03
ஐக்கிய இராச்சியம்	செல்சீ மலர் கண்காட்சி	மே
ஜப்பான்	ஜட்டா (JATA) பிராந்திய குழு உறுப்பினர்களின் விஜயம் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் விசேடமாக பௌத்த மக்கள்	மே 13-19
இணையம்	கூடுதலாக வாழும் தெற்காசிய (இந்தியா, பங்களதோஷ்), தென் கிழக்காசிய (தாய்லாந்து, இந்தோனேசியா, வியட்னாம்), சீன, தென்கொரிய மற்றும் ஜப்பான் சந்தைகளை இலக்கு வைத்து பீ.பீ.சியிலும் (முகப் பக்கம் மற்றும் பயணப் பகுதி) லோன்லி ப்லேனட் இணையதளப் பக்கத்திலும் வெசாக் டிஜிட்டல் பிரச்சாரத்தை ஆரம்பித்தது.	மே
ஜூன்		
கொரியா	KOFTA உலக பயணக் கண்காட்சி	ஜூன் 7-10
சீனா	BITE பயணக் கண்காட்சி – பெய்ஜிங்	ஜூன் 15-17
சீனா	தியன்ஜி மற்றும் பெய்ஜிங்கில் சாலைக் காட்சி	முறையே ஜூன் 14 மற்றும் 16
ஜூலை		
ஜப்பான்	முகவரமைப்புக்களின் அறிமுக சுற்றுப் பயணம்	ஜூலை 12-16
ஜப்பான்	முகவரமைப்புக்களின் அறிமுக சுற்றுப் பயணம்	ஜூலை 31 – ஓக 04
ஜப்பான்	அஸஹி செய்திப் பத்திரிகையின் விளம்பரம்	ஜூலை – 04
ஜப்பான்	நிக்கை செய்திப் பத்திரிகையின் விளம்பரம்	ஜூலை 11
ஓகஸ்ட்		
	100 இந்திய வீரர்கள் பங்கேற்ற ப்ரோ கொல்வ் (குழிப்பந்தாட்டம்) போட்டித் தொடர்	
செப்டம்பர்		
ஜப்பான்	இலங்கைத் திருவிழா	செப் 08-09
ஜப்பான்	பெண்களுக்கு மட்டும் பிரத்தியேகமான கார் விளம்பரங்கள்	செப் 11 – ஒக் 10
சுவீடன்	ஸ்டொக்ஹோம் திரைப்பட விழாவில் விளம்பரம்	செப் 17-24
ரஷ்யா	லெஷர் பயண மற்றும் சுற்றுலா கண்காட்சி	செப் 19-22
ஜப்பான்	JATA பயணக் கண்காட்சி – டோக்கியோ	செப் 20-23
பிரான்ஸ்	IFTM பயணக் கண்காட்சி	செப் 18-21
போலந்து	TT வார்சோவ் பயணக் கண்காட்சி	செப் 27-29
	ஐ.சீ.சீ. டி டுவண்டி செம்பியன்ஷிப் போட்டி – ஐ.சீ.சீ உத்தியோகபூர்வ ஒலிபரப்பு நிறுவனத்தினால் இலங்கை சுற்றுலாத் துறை கவர்ச்சிகளை ஊக்குவிக்கும் 30 செக்கன் விளம்பரமும், ரீப்ளே திரையில் 15 செக்கன் வர்த்தக விளம்பரமும்	செப் 18 – ஒக் 07
ஒக்டோபர்		
சிங்கப்பூர்	ITB ஏஷியா	ஒக்டோபர் 03 -05
யுக்ரேன்	UTM பயணக் கண்காட்சி	ஒக்டொபர் 11 -13
நவம்பர்		
ஐக்கிய இராச்சியம்	உலக பயணக் கண்காட்சி (WTM)	நவம்பர் 05-08
ஜப்பான்	வியாபார அறிமுக சுற்றுப் பயணம்	நவம்பர் 22- 29
சீனா	சீனா சர்வதேச பயணக் கண்காட்சி, ஷங்ஹாய்	நவம்பர் 22-24
சீனா	ஹங்சூவில் சாலைக் காட்சி	நவம்பர் 25
ஜப்பான்	பயண முகவர்களுக்கான செயலமர்வு	நவம்பர் 06
சீனா	செங்டு சர்வதேச பயணக் கண்காட்சி	நவம்பர் 29 – டிச 01

ஐக்கிய இராச்சியம்

உலக பயண சந்தை – எக்செல் கண்காட்சி மண்டபம், லன்டன் – 2012 நவம்பர் 5-8

சுமார் 5000 வர்த்தகப் பங்காளிகளை கவர்ந்த 2012 உலக பயணச் சந்தை வர்த்தக கண்காட்சியில் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் பங்கேற்றது.

இலங்கையின் கலாசார பாரம்பரியங்களை காண்பதற்குரிய சிறந்த சந்தர்ப்பத்தை பார்வையாளர்களுக்கு வழங்கும் வகையில் பழக்க வழக்கங்களுடன் கூடிய ஒரு பாரம்பரிய திருமண வைபவம் அங்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

கண்காட்சியின் மூன்றாம் நாளன்று இலங்கையை கிரிக்கட் விளையாட்டுக்கான ஓர் அடைவிடமாக முன்னேற்றுவதில் கவனம் செலுத்தி இலங்கைக் கூடத்தில் இருந்த ஊழியர்களும், காட்சிப்படுத்துபவர்களும் இலங்கை கிரிக்கட் ரீ – சேர்ட்டை அணிந்திருந்தனர். உலகப் புகழ்பெற்ற ஒரு பயண கண்காட்சியில் இலங்கையை ஒரு கிரிக்கட் நாடாக காண்பிப்பதும், கூடுதலான கிரிக்கட் ரசிகர்களை நாட்டுக்கு கவருவதும் இதன் நோக்கமாக அமைந்திருந்தது.

கென்ட் சாகா சாலைக் காட்சி – டென்பீஸ் திராட்சை தோட்டம் – 2012 ஜூலை 23

சாகா ஹொலிடேஸ் அமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்ட சாகா சாலைக் காட்சி டென்பீஸ் திராட்சைத் தோட்டத்தில் நடைபெற்றது. இதில் சுமார் 200 முகவர்கள் கலந்து கொண்டார்கள். இதற்கு முந்திய வருடங்களில் ஐக்கிய இராச்சியத்தின் சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்வதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளும் விடயத்தில் பிரதான சுற்றுப்பயண ஏற்பாட்டுத் தளங்களில் ஒன்றான சகா ஹொலிடே அமைப்பு விளங்கியது. அங்கு அழைக்கப்பட்டிருந்த அதிதிகள் மத்தியில் இலங்கையை மிகவும் வித்தியாசமான ஒரு அடைவிடமான எடுத்துக் காட்டுவதற்கான சந்தர்ப்பத்தை இந்த சாலைக் கண்காட்சி இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்திற்கு வழங்கியது. ஒரு கலைஞர்கள் கூட்டத்தினால் அரங்கேற்றப்பட்ட இலங்கையின் நடனம் அங்கு வருகை தந்திருந்த அதிதிகளுக்கு மகிழ்வூட்டியது.

பேர்மிங்ஹாம் TTG சாலைக் கண்காட்சி – 2012 செப்டம்பர் 24

ரீ.ரீ.ஜீ சாலைக் கண்காட்சியில் இலங்கை சுற்றுலாத் துறையினர் பங்கேற்றார்கள். பிரதான விற்பனைத் தகவல்களை வழங்கி சாத்தியமிக்க பயண முகவர் அமைப்புக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளும் நோக்குடன் அவர்கள் பங்கேற்றனர்.

பட்டா (PATTA) லன்டன் சாலைக் கண்காட்சியின் ரசனை – 2012 செப்டம்பர் 11

பசுபிக் ஆசிய பயணச் சங்கத்தின் இலன்டன் பிரிவினால் ஒழுங்கு செய்யப்பட்ட பட்டா (PATTA) லன்டன் ரசனை சாலைக் கண்காட்சியில் லண்டன் (PATTA) பட்டா உறுப்பினர்கள் 15 பேர் பங்கேற்றார்கள். 300 இற்கும் மேற்பட்ட பயண முகவர்களும், சுற்றுப் பயண ஏற்பாட்டாளர்களும் இதில் கலந்து கொண்டார்கள். புதிய பயண முகவர் அமைப்புக்கள் மற்றும் சுற்றுப்பண ஏற்பாட்டாளர்களிடம் இலங்கையை ஒரு நம்பத்தகுந்த அடைவிடமாக அடையாளப்படுத்தி அவர்களை இணக்கப்பாட்டுக்கு கொண்டு வர இது இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்திற் சந்தர்ப்பமாக அமைந்தது.

மென்சஸ்டர் ஹொலிடே கண்காட்சி – மென்சஸ்டர் – 2012 ஜனவரி 19-22

பயண ஆலோசகர்களுடன் இணைந்து இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் 2012 விடுமுறை மற்றும் பயண கண்காட்சியில் பங்கேற்றது. ஐக்கிய இராச்சியத்தின் முன்னணி பாவனையாளர் பயண நிகழ்ச்சிகளில் ஒன்றான இது 18 வருட கால நிறைவை அனுஷ்டித்ததோடு, மென்சஸ்டர் நகரில் முதற்தடவையாக ஆரம்பமானது. தகவல்களையும், உடன்படிக்கைகளையும் எதிர்பார்த்த 10,000 இற்கும் மேற்பட்ட பயணிகளை இந்த கண்காட்சி கவர்ந்திருந்தது.

டெஸ்டினேஷன் பயண கண்காட்சி – லன்டன் – வார்விக் ரோட் ஏர்ல்ஸ் கோட் முன்றல் – 2012 பெப்ரவரி 2-5

பெரடைஸ் வெகேஷன் மற்றும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து நுவர்வோருக்காக இந்த டெஸ்டினேஷன் ஹொலிடே கண்காட்சியில் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் பங்கேற்றது. 30,000 இற்கும் மேற்பட்ட பயணிகளும், முன்னணிப் பிரமுகர்களும் இதில் கலந்து கொண்டார்கள். பெரடைஸ் வெக்கேஷன் நிறுவனம் அங்கு 200 இற்கும் மேற்பட்ட உடன்படிக்கை பதிவுகளை பெற்றுக் கொண்டது. இவற்றில் 74 இன்னமும் செயற்திறனாக நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

லன்டன் திருமணக் கண்காட்சி – வார்விக் ரோட் ஏர்ல்ஸ் கோட் முன்றல் – 2012 பெப்ரவரி 2-5

சாத்தியமிக்க பயணிகளுக்கு தெளிவுபடுத்தும் ஒரு முன்மாதிரிக் களமாக விளங்கிய லன்டன் திருமண கண்காட்சியில் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் பங்கேற்றது. லன்டனில் திருமண மற்றும் தேன்நிலவு சந்தை மிகவும் வருமானம் கூடிய போட்டிமிக்க துறையாக விளங்குகின்றது. லன்டனில் ஒரு திருமண வைபவத்தை நடத்துவதற்கான செலவினம் 20,000 ஸ்ரேலிங் பவுண்களுக்கும் அதிகம் என மதிப்பிடப்பட்டுள்ளது. பல திருமணங்கள் லன்டனுக்கு வெளியே ஏற்பாடு செய்யப்படுவதால், திருமண மற்றும் தேன்நிலவு வைபவங்களுக்கு மிகவும் கவர்ச்சிமிக்க அடைவிடமாக இலங்கை மாறி வருகின்றது. 3 நாட்கள் இடம்பெற்ற இந்த நிகழ்ச்சியில் 10,000 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டார்கள். Barefoot பயண முகவரமைப்பு இந்த நிகழ்ச்சியின் இணை காட்சிப்படுத்துனராக இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்துடன் இணைந்து கொண்டது. Barefoot பயண முகவரமைப்பிடம் தேன்நிலவுக்காக 65 இற்கும் மேற்பட்டோரும், திருமணங்களுக்காக மூவரும் விசாரித்துள்ளனர்.

செல்சீ மலர் கண்காட்சி - லன்டன் -2012 மே 21-25

சீகிரியா சிங்கத்தின் பாதங்களுடன் பாசி மற்றும் மந்தாரை மலர்களால் அலங்கரிக்கப்பட்ட செயற்கை மலையைச் சுற்றி பெரியளவில் கண்காட்சிக் கூடம் அமைக்கப்பட்டிருந்தது. மலையின் மேலிருந்து வழிந்தோடும் ஆறு மிதக்கும் தீவில் அமைக்கப்பட்ட ஒரு அமைதியான தடாகத்திற்குள் வந்து சேர்வது போல் அங்கு வடிவமைக்கப்பட்டிருந்தது. டயமன்ட் ஜூபுலி மந்தாரை பூ (ஓர்க்கிட்) மாண்புமிகு மகாராணிக்கு வழங்கப்பட்டது.

சீனா

பெய்ஜிங் சர்வதேச சுற்றுலாக் கண்காட்சி (BITE) - சீன தேசிய மாநாட்டு நிலையம் - 2012 ஜூன் 15-17

பெய்ஜிங் சர்வதேச சுற்றுலா கண்காட்சியில் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் பங்கேற்றது. இதில் சுமார் 30 மாகாணங்களுடன் சேர்த்து 40 இற்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த கண்காட்சியாளர்கள் பங்கேற்றனர்.

சீனா சர்வதேச பயண கண்காட்சி - சங்ஹாய் புதிய சர்வதேச கண்காட்சி நிலையம் - 2014 நவம்பர் 15-18

பெய்ஜிங் சர்வதேச சுற்றுலாக் கண்காட்சியில் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் கலந்து கொண்டது. இதில் 1,000 சீன வர்த்தக கொள்வனவாளர்கள், 800 ஊடகவியலாளர்கள் உட்பட 80 நாடுகளைச் சேர்ந்தவர்கள் பங்கேற்றார்கள்.

ஹங்சூ சாலைக் கண்காட்சி - தியன் யுவன் கோபுரம் ஹங்சோ- 2012 நவம்பர் 19

பெய்ஜிங்க மற்றும் தியன்ஜின் சாலை ஓரக் கண்காட்சியில் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் கலந்து கொண்டது. இந்த ஒவ்வொரு நகரிலும் 40 முதல் 50 வரையான முகவரமைப்புக்களும், 10 முதல் 15 வரையான ஊடகவியலாளர்களும் பங்கேற்றார்கள். அங்கு பயண முகவர்கள் இலங்கை தொடர்பில் சீன முகவர் அமைப்புக்களுடன் வர்த்தக கலந்துரையாடல்களை நடத்தியதோடு, காட்சியளிப்புக்களையும் முன்வைத்தார்கள்.

குவங்ஷோ சர்வதேச பயணச் சந்தை - சீன இறக்குமதி மற்றும் ஏற்றுமதி சந்தை கட்டடத் தொகுதி, குவங்ஷோ - 2012 மார்ச் 01 - 03

பெய்ஜிங்க மற்றும் தியன்ஜின் சாலை ஓரக் கண்காட்சியில் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் கலந்து கொண்டது. இதில் சுமார் 30 மாகாணங்களுடன் சேர்த்து 40 இற்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த 800 கண்காட்சியாளர்கள் பங்கேற்றனர். GITF 2012 கண்காட்சியில் கூடுதலாக பார்வையிடப்பட்ட காட்சிக் கூடங்களில் இலங்கைக் காட்சிக் கூடமும் ஒன்றாகும். இதற்காக மிகச்சிறந்த காட்சி அரங்கிற்கான விருது கிடைக்கப் பெற்றது.

ஷென்சன் மற்றும் குவங்ஷோ - பெஸ்ட் வெஸ்டன் ஹோட்டல், ஷென்சன் கென்டன் ஹோட்டல், குவங்ஷோ - 2012 பெப்ரவரி 27 மற்றும் பெப்ரவரி 29

பெய்ஜிங்க மற்றும் தியன்ஜின் சாலை ஓரக் கண்காட்சியில் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் கலந்து கொண்டது. இந்த ஒவ்வொரு நகரிலும் 56 சீன பயண ஏற்பாட்டாளர்களும், 14 சீன பயண ஊடகவியலாளர்களும் பங்கேற்றனர். அங்கு பயண முகவர்கள் இலங்கை தொடர்பில் சீன முகவர் அமைப்புக்களுடன் வர்த்தக கலந்துரையாடல்களை நடத்தியதோடு, காட்சியளிப்புக்களையும் முன்வைத்தார்கள்.



ரஷ்யா

மொஸ்கோவ் சர்வதேச பயண மற்றும் சுற்றுலாக் கண்காட்சி - எக்ஸ்போ நிலையம், மொஸ்கோவ், ரஷ்யா- 2012 மார்ச் 21-24

197 நாடுகளைச் சேர்ந்த மக்களைக் கவர்ந்த மொஸ்கோவ் சர்வதேச பயண மற்றும் சுற்றுலாக் கண்காட்சியில் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் பங்கேற்றது. இலங்கைக்குரிய காட்சிக் கூடத்தில் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தின் இலச்சினை காட்சிப்படுத்தப்பட்டது.

ஒட்டிக் லெஷர் பயண மற்றும் சுற்றுலா கண்காட்சி - IEC குரொஸ்கஸ் எக்ஸ்போ நிலையம், மொஸ்கோவ், ரஷ்யா - 2012 செப்டம்பர் 19 -22

சம்பந்தப்பட்ட துறைகளைச் சேர்ந்த பல்வேறு முகவரமைப்புக்களும், வளவாளர்களும், ஹோட்டல்களும், கூட்டுத்தாபனங்களும், கண்காட்சியாளர்களும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள்.

யுக்ரேன்

யுக்ரேன் சர்வதேச பயண மற்றும் சுற்றுலாக் கண்காட்சி - கீவ், யுக்ரேன் - 2012 மார்ச் 28-30

50 நாடுகளைச் சேர்ந்த மக்களைக் கவர்ந்த யுக்ரேன் சர்வதேச பயண மற்றும் சுற்றுலாக் கண்காட்சியில் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் பங்கேற்றது. அங்கு இலங்கை சுற்றுலாத் துறை வழிகாட்டல் நூல் ரஷ்ய மொழியில் அறிமுகப்படுத்தப்பட்டது.

யுக்ரேன் சர்வதேச சந்தை - கீவ் சர்வதேச கண்காட்சி நிலையம் - 2012 ஒக்டோபர் 11-13

"இலங்கைத் தீவைப் புதுப்பித்தல்" என்ற தொனிப்பொருளை வலியுறுத்தும் வகையில் இலங்கை சுற்றுலாத் துறையின் இலச்சினையை அங்கு இலங்கை கூடம் அடிக்கடி காட்சிப்படுத்தியது.

கஸகஸ்தான்

கஸகஸ்தான் சர்வதேச பயண மற்றும் சுற்றுலா கண்காட்சி - அட்கன்ட் நிலையம், அல்மாதி- 2012 ஏப்ரல் 25 - 27

கஸகஸ்தானைச் சேர்ந்த 1252 பயண முகவர்கள் அடங்கலாக 40 நாடுகளின் மக்களைக் கவர்ந்த கசகஸ்தான் சர்வதேச பயண மற்றும் சுற்றுலாக் கண்காட்சியில் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் பங்கேற்றது. இந்தக் கண்காட்சியில் செயற்திறனாக பங்கேற்றமைக்காக இலங்கைக்கு நன்றி தெரிவித்து சான்றிதழும் கிடைக்கபெற்றது.

அஸ்டனா சாலையோர கண்காட்சி - ப்ரசிடன் ரிக்ஸூஸ் ஹோட்டல் - 2012 நவம்பர் 21

அதி மேதகு ஜனாதிபதியின் கஸகஸ்தானுக்கான விஜயத்துக்கு இணைவாக நடத்தப்பட்ட அஸ்தனா கண்காட்சியில் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் கலந்து கொண்டது. இதில் 200 ஹோட்டல் உரிமையாளர்களும், சுற்றுப்பயண ஏற்பாட்டாளர்களும் பங்கேற்றனர்.

ஜேர்மனி

சர்வதேச சுற்றுலா பரிமாற்று கண்காட்சி - பேர்லின் - 2012 மார்ச் 7 - 11

உலகின் முன்னணி சுற்றுலா வர்த்தகக் கண்காட்சியாக விளங்கும் இதில் 1,100 கண்காட்சிக் கூடங்கள் காணப்பட்டன. இந்த வருடம் 188 நாடுகளைச் சேரந்த 11,163 கம்பனிகள் தமது புதிய தயாரிப்புக்களையும், சுற்றுலாத் துறை சார்ந்த சேவைகளையும் அங்கு முன்வைத்தன. மொத்தமாக 170,000 பேர் இதில் கலந்து கொண்டனர். வர்த்தக ரீதியான பார்வையாளர்களில் 40 சதவீதமானோர் வெளிநாட்டவர்களாவர். 94 நாடுகளைச் சேர்ந்த 7,000 ஊடகவியலாளர்களுக்கு இதில் பங்கேற்க அனுமதியளிக்கப்பட்டிருந்தது. இலங்கை சுற்றுலாத் துறையுடன் சம்பந்தப்பட்ட தரப்பினரும் இதில் பங்கேற்றனர். இவர்களில் பயண ஏற்பாட்டாளர்கள், ஹோட்டல் உரிமையாளர்கள் உட்பட 60 சதவீதமான இணை கண்காட்சியாளர்களும் அடங்குகின்றனர்.

CMT கண்காட்சி - ஸ்டட்கார்ட் - 2012 ஜனவரி 14 - 22

ஜேர்மனியின் மிகப் பெரிய நுகர்வோர் கண்காட்சியாக விளங்கும் 2012 CMT கண்காட்சியில் நான்கு இலங்கை பயணக் கம்பனிகள் பங்கேற்றன. இந்த நிகழ்வில் (வர்த்தகம், ஊடகம், பொதுத் துறை சார்ந்த) சுமார் 223,000 பேர் கலந்து கொண்டார்கள்.

பிரான்ஸ்

சர்வதேச பிரான்ஸ் பயண சந்தை - டொப் ரெசா சந்தை முன்றல் - பரீஸ் போர்ட் டி வேசைல்ஸ் ரயில் நிலையம் - 2012 செப்டம்பர் 18-21

2012 சர்வதேச பிரான்ஸ் பயணச் சந்தையில் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் பங்கேற்றதோடு, பணியகம் அங்கு வந்த பார்வையாளர்களுக்கு தேனீர் வழங்கி உபசரித்தது. இலக்கம் 7.2 மண்டபத்தில் 27,000 சதுர மீற்றர்களில் நிரம்பிக் காணப்பட்ட 315 இற்கும் மேற்பட்ட நிறுத்திகளில் சுமார் 1250 ரகங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. 164 சுற்றுலா அலுவலகங்களை இந்த கண்காட்சி கொண்டிருந்தது.

சுவீடன்

TUR பயண மற்றும் சுற்றுலா கண்காட்சி - ஸ்வென்ஸ்கா மசன், கொத்தன்பேர்க், 2012 மார்ச் 22 - 25

79 நாடுகளைச் சேர்ந்தவர்கள் பங்கேற்ற 2012ம் ஆண்டு TUR பயண மற்றும் சுற்றுலாக் கண்காட்சியில் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் கலந்து கொண்டது.

இத்தாலி

போர்சா சர்வதேச சுற்றுலா மற்றும் வர்த்தக கண்காட்சி - ஃபியரா- மிலானோ - 2012 பெப்ரவரி 16-19

போர்சா சர்வதேச சுற்றுலா மற்றும் வர்த்தக கண்காட்சியில் (BIT) பங்கேற்ற இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் கண்காட்சியை பார்வையிட வந்தவர்களுக்கு தேனீர் வழங்கி உபசரித்தது. இந்த கண்காட்சியில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட முக்கிய தொடர்புகள் என்று பார்த்தால் இலங்கைக்கு விஜயம் செய்து ஊடகவியலாளர்களுக்கான பயண நிகழ்ச்சியின் கீழ் ஆவணப்படங்களை தயாரிப்பதில் மிகவும் ஆர்வம் காட்டிய RAI தொலைக்காட்சி அலைவரிசை, "VIAGGIAND" சுற்றுலா சஞ்சிகை, "GEO REPORTER", MARIE CLAIRE பயண மற்றும் சுற்றுலா சஞ்சிகை என்பவற்றுடனான தொடர்பைக் குறிப்பிடலாம்.

நெதர்லாந்து

வேக்கண்டியூரஸ் வர்த்தக கண்காட்சி - ரோயல் டச்சு ஜாபஸ் கண்காட்சி மற்றும் மாநாட்டு நிலையம், உட்ரெச் - 2012 ஜனவரி 10 - 15

நெதர்லாந்தில் ஒரு பெரிய சுற்றுலா மற்றும் விடுமுறைக்கால கண்காட்சியாக விளங்கும் வேக்கன்டியூரஸ் வர்த்தக கண்காட்சியில் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் கலந்து கொண்டது. இதில் சுமார் 160 நாடுகளைச் சேர்ந்த மக்கள் பங்கேற்றனர்.

ஐக்கிய அரபுகள் இராச்சியம்

ATM டுபாய் வர்த்தக கண்காட்சி - டுபாய் சர்வதேச கண்காட்சி மற்றும் மாநாட்டு நிலையம் - 2012 ஏப்ரல் 30 - மே 03

50 நாடுகளைச் சேர்ந்த மக்களை கவர்ந்த ATM டுபாய் வர்த்தக கண்காட்சியில் ஊடக நேர்காணல்கள், செய்திப் பத்திரிகைக் கட்டுரைகள் மற்றும் தொலைக்காட்சி நேர்காணல்கள் ஊடாக இலங்கையின் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்காக இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் பங்கேற்றது.

இந்தியா

மும்பாய் மற்றும் புது டில்லியில் 2012 ஆண்டில் OTM கண்காட்சி

மும்பாய் கண்காட்சி நிலையம், மும்பாய் - 2012 பெப்ரவரி 17-19

ப்ரகத்தி மெய்டன், புது டில்லி - 2012 பெப்ரவரி 24-26

மும்பாய் மற்றும் புதுடில்லியில் 2012ம் ஆண்டில் நடைபெற்ற OTM கண்காட்சியில் 61 நாடுகளையும், 35 இந்திய மாநிலங்களையும் சேர்ந்த 1500 இற்கும் மேற்பட்ட கண்காட்சியாளர்கள் பங்கேற்றனர். வெளி நாடுகளில் இருந்து பெரும் எண்ணிக்கையானவர்கள் பங்கேற்ற முதல் சந்தர்ப்பமாக இது விளங்கியது. 186 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் இதனை பார்வையிட்டுள்ளனர்.

OTM மும்பாய் மற்றும் புதுடில்லி கண்காட்சியில் மிகச் சிறந்த வடிவமைப்பாளருக்கான விருதை இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் தட்டிக் கொண்டது.

புதுடில்லி - சுதந்திர தின விழா - புதுடில்லியில் உள்ள இலங்கை உயர்ஸ்தாணிகராலயம்- 2012 பெப்ரவரி 04

புது டில்லியில் உள்ள இலங்கை உயர் ஸ்தாணிகராலயத்தில் இலங்கையின் உணவுத் திருவிழா ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் இலங்கையைச் சேர்ந்த இரண்டு சமையற்காரர்கள் பங்கேற்றனர்.

பெல்ஜியம்

சலொன் டி வேக்கன்சஸ் (ப்ரஸல்ஸ் விடுமுறைக்கால சந்தை) - ப்ரஸல்ஸ் எக்ஸ்போ- 2012 பெப்ரவரி 06 - 10

சுமார் 145 நாடுகள் பங்கேற்ற விடுமுறை, பயண, சுற்றுலா மற்றும் விநோத கண்காட்சியான செலொன் டி வேக்கன்சஸில் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் கலந்து கொண்டது. பல்வேறு சுற்றுலா அடைவிடங்கள் பற்றி தெளிவுபடுத்தும் சுற்றுலாத் துறை பிரதிநிதிகளை சந்திப்பதற்கான ஒரு சிறந்த வாய்ப்பை இந்த ப்ரஸல்ஸ் விடுமுறைக்கால கண்காட்சி வழங்கியது.

தொழில்வாண்மை மிக்க பயண முகவர்கள் மற்றும் ஏற்பாட்டாளர்கள் சந்தித்துக் கொண்ட இடமாகவும் இது விளங்கியது.

போலாந்து

TT வார்சோ - சர்வதேச பயணக் கண்காட்சி - வார்சோ வர்த்தக சந்தை மற்றும் காங்கிரஸ் நிலையம் - 2012 செப்டம்பர் 27 - 29

வர்த்தக தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்காக போலாந்து சுற்றுலாத் துறையினரும், சர்வதேசப் பிரதிநிதிகளும் போலாந்தில் சந்தித்துக் கொண்ட மிக முக்கியமான இடமான இந்த TT வார்சோவ் சர்வதேச பயணக் கண்காட்சியில் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகமும் பங்கேற்றது. நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்தவர்கள் இதில் கலந்து கொண்டார்கள்.

செக் குடியரசு

விடுமுறைக்கால உலக வர்த்தக கண்காட்சி - ப்ரகுவே கண்காட்சித் திடல் - 2012 பெப்ரவரி 09 - 12

விடுமுறை, சுற்றுலா மற்றும் பொழுதுபோக்குக்கான இந்த உலக கண்காட்சியில் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் கலந்து கொண்டது. 47 நாடுகளைச் சேர்ந்தவர்கள் இதில் பங்கேற்றார்கள்.

பல்வேறு வகையான சிறப்பியல்புகளையும், விசேட ஊக்குவிப்புக்களையும் கொண்ட ஒரு பிரத்தியேக சுற்றுலா கண்காட்சியாக இது அமைந்திருந்தது. பார்வையாளர்களையும், கண்காட்சியாளர்களையும் மகிழ்வூட்டிய கண்காட்சியாகவும் இது அமைந்திருந்தது.

பங்களதேஷ்

பங்களதேஷ் சர்வதேச சுற்றுலாக கண்காட்சி (BITF 2012 பங்களதேஷ்) பங்கபந்து சர்வதேச மாநாட்டு நிலையம், டாக்கா- 2012 செப்டம்பர் 27 - 29

டாக்காவிலுள்ள இலங்கை உயர்ஸ்தாணிகராலயம் இலங்கை சுற்றுலாத் துறையின் சார்பில் இந்த கண்காட்சியில் பங்கேற்றது. இதில் 15 நாடுகள் கலந்து கொண்டன.

பங்களதேஷ் ஆசிய சுற்றுலா கண்காட்சி - பங்கபந்து சர்வதேச மாநாட்ட நிலையம், டாக்கா- 2012 செப்டம்பர் 21- 23

15 நாடுகள் பங்கேற்ற இந்தக் கண்காட்சியில் இலங்கை நடனக் கலைஞர்கள் குழு தமது கலையை முன்வைத்தது. டாக்காவிலுள்ள இலங்கை உயர்ஸ்தாணிகராலயம் இலங்கை சுற்றுலாத் துறையின் சார்பில் இந்த கண்காட்சியில் பங்கேற்றது.

கொரியா

கொரியாவின் 25ஆவது உலக பயணச் சந்தை (KOTFA)- 3 குஐ. மண்டபம் "C" COEX (மாநாட்டு மற்றும் கண்காட்சி நிலையம்), சியோல், கொரியா - 2012 ஜூன் 07 - 12

2012 கண்காட்சியிலும், இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் பங்கேற்றது. 20 கொரிய கம்பனிகளுடன் வர்த்தகம் சார்ந்த சந்திப்புக்களும் இடம்பெற்றன. இந்தக் கண்காட்சி 60 நாடுகளைச் சேர்ந்த மக்களை கவர்ந்தது.

15 ஆவது புஸ்னான் சர்வதேச பயணச் சந்தை (BITF 2012) - பெக்ஸ்கோ கண்காட்சி நிலையம், கொரியா- 2012 செப்டம்பர் 7 - 10

புஸ்னான் சர்வதேச பயணக் கண்காட்சியில் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் கலந்து கொண்டது. 20 கொரிய கம்பனிகளுடன் வர்த்தகம் சார்ந்த சந்திப்புக்களும் இடம்பெற்றன. இந்தக் கண்காட்சி 37 நாடுகளைச் சேர்ந்த மக்களை கவர்ந்தது.

சிங்கப்பூர்

ITB ஏசியா - சேன்ட்ஸ் எக்ஸ்போ மற்றும் மாநாட்டு நிலையம் , மரீனா குடா திடல், சிங்கப்பூர்- 2012 ஒக்டோபர் 17- 19

சுற்றுலாத் துறையில் முன்னணி வகிக்கும் தரப்புக்களுடன் நெருக்கமான தொடர்புகளை விருத்தி செய்வதற்கும், பிராந்தியத்தில் புகழ்வாய்ந்த பயண ஏற்பாட்டாளர்களுடன் சிறந்த வர்த்தக வாய்ப்புக்களை உருவாக்குதற்காகவும் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் இந்தக் கண்காட்சியில் பங்கேற்றது. 50 இற்கும் மேற்பட்ட நாடுகள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டன.

அவுஸ்திரேலியா

சிட்னியில் கலாசார கண்காட்சி - 2012 ஒக்டோபர் 13

சிட்னியிலுள்ள டாலிங் துறைமுக பாலத்தில் இந்த ஊக்குவிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. பாராம்பரிய நடனங்களை (26 வித்தியாசமான நடனங்கள்) இந்த கண்காட்சி உள்ளடக்கியிருந்தது. டாலிங் துறைமுக பாலத்தில் இடம்பெற்ற இந்த சாலையோர கண்காட்சியானது சிட்னியில் வசிக்கும் இலங்கையர்களை உள்ளடக்கி இடம்பெற்ற சாலையோர கண்காட்சியாக விளங்கியது.

- சாதகமான பொருளாதார மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மைக்காக அவுஸ்திரேலிய மக்கள் மத்தியில் இது பற்றிய விழிப்புணர்வை வழங்குதல்.
- தீவின் கவர்ச்சிமிக்க இடங்களை காண்பித்தல்.

கிரிக்கட் விளம்பரம் - 2012 டிசம்பர் 26

2012ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இலங்கை கிரிக்கட் அணி அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டதற்கு இணைவாக மெல்போர்ன் கிரிக்கட் கழகத்திலும், சிட்னி கிரிக்கட் கழகத்திலும் விளம்பரப்படுத்தப்பட்டது.
மெல்போர்ன் மற்றும் சிட்னி கிரிக்கட் மைதானங்களில் காட்சிப்படுத்தப்பட்ட பெரிய திரை விளம்பரம்.

ஜப்பான்

JATA பயணக் கண்காட்சி - டோக்கியோ பிக் சைட், டோக்கியோ- 2012 செப்டம்பர் 20 - 24

156 நாடுகளைச் சேர்ந்த மக்களை கவர்ந்த 2012 JATA பயணக் கண்காட்சியில் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் பங்கேற்றது.

கடல் சுழியோடுதல் கண்காட்சி - சன் ஷைன் சிட்டி நிலையம்- 2012 ஏப்ரல் 6 - 8

பல்வேறு நாடுகளிலிருந்து 52, 314 பேரை கவர்ந்த இந்த கடல் சுழியோடல் கண்காட்சியில் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் கலந்து கொண்டது. அங்கு இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் முதல் தடவையாக பகிர்ந்தளிக்கப்படும் ஊக்குவிப்பு குறிப்பாக சுழியோடல் பற்றிய சிறு கை நூலை அறிமுகப்படுத்தியது.

யொமியுரி /யொமியுரி நாளிதழ் /அசஹி /நிக்கை செய்திப் பத்திரிகைகளில் விளம்பரம்

2012 ஜூன் 28 (யொமியுரி), 2012 ஜூலை 04 (அசஹி), 2012 ஜூலை 11 (நிக்கெய்)

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் மேற்குறிப்பிட்ட செய்திப் பத்திரிகைகளில் முழுப் பக்க விளம்பரத்தை வெளியிட்டது.



பெண்களுக்கு மட்டுமான ரயில் கார் விளம்பரங்கள்

ஹிபியா/டொசாய் டொயொக்கோசொக்கு, சியொடோ, யரகுச்சோ, புக்குதொஷின், ஹன்சொமொன் பகுதிகள் - 2012 செப்டம்பர் 11 முதல் 2012 ஒக்டோபர் 10 ஆம் திகதி

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் பெண்கள் மட்டும் செல்லும் ரயில் கார்களில் குறிப்பாக 6 டோக்கியோ மெட்ரோ ரயில் பாதைகளில் விளம்பரப்படுத்தியுள்ளது.

நிகழ்வுகள்

• **யாழ் சர்வதேச வர்த்தக சந்தை (JITF) 2012 ஜனவரி 20 - 22 -** துறையப்பா தேசிய மைதானத்தில் நடைபெற்ற யாழ் சர்வதேச வர்த்தக கண்காட்சியில் பங்கேற்றது.

• **ஆயுபோவன் சைனா - ட்ரகன் நைட் - 2012 ஜனவரி 28**

காலிக் கோட்டை வெளிச்ச வீட்டில் சீன மற்றும் இலங்கை கலாசார நிகழ்ச்சிகளுடன் சீனாவின் புத்தாண்டை கொண்டாடுவதற்கான சீன கலாசார விழா.

இந்த நிகழ்ச்சியில் உள்ளடக்கப்பட்டிருந்த விடயங்கள்

- 50 சீன பல்கலைக்கழக மாணவர்களின் கலாசார நிகழ்ச்சி
- இலங்கை கடற்படையின் பாரம்பரிய நடனமும், இசை நிகழச்சியும்
- சீன மற்றும் இலங்கை உணவுத் திருவிழா
- செயற்பாட்டுக் கூடங்கள், விற்பனைக் கூடங்கள், நினைவுச் சின்னக் கூடங்கள், ஊக்குவிப்புக் கூடங்கள், டி.ஜே, கரோக்கே இசை
- கலை நிகழ்ச்சி

• **பழக்கப்படுத்தும் செயலமர்வுகள் - 2012 பெப்ரவரி 08**

சீன நுகர்வோரின் நடத்தைக் கோலங்கள் சம்பந்தமாக இலங்கை பயண ஏற்பாட்டாளர்களுக்கும். பயண முகவரமைப்புக்களுக்கும் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தியமை.

• **எக்ஸ்போ 2012 - 2012 மார்ச் 28 - ஏப்ரல் முதலாம் திகதி வரை**

ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட எக்ஸ்போ 2012 சர்வதேச வர்த்தக கண்காட்சியில் பங்கேற்றமை.

• **கொல்ப் விளையாட்டு போட்டி, 2012 ஓகஸ்ட்**

2012ம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் 100 இந்திய வீரர்கள் பங்கேற்ற ஸ்டேன்டர்ட் சாட்டர்ட் ப்ரோ கொல்ப் விளையாட்டுப் போட்டிக்கு ஆதரவளித்தமை.

• **லங்கா செலேஞ் முச்சக்கர வண்டி சவாரி - 2012 ஓகஸ்ட் 31 - செப்டம்பர் 12**

இலங்கையின் முதலாவது உத்தியோகபூர்வ முச்சக்கரவண்டி சவாரியான லங்கா செலேஞ் போட்டி கொனைசன்ஸ் டி சிலோன் நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் 25 அணிகள் பங்குபற்றின. இந்த நிகழ்ச்சி சம்பந்தமான தகவல்களை திரட்டுவதற்காக ஊடகவியலாளர்களுக்கு அனுசரணை வழங்குவதில் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் துணைபுரிந்தது.

• **உலக சுற்றுலா தின கொண்டாட்டங்கள் - 2012 செப்டம்பர் 27**

உலக சுற்றுலா தின கொண்டாட்டங்களை முன்னிட்டு கண்டி மற்றும் களுத்துறையில் பல நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டன. சுற்றுலாத் துறையின் முக்கியத்துவம் பற்றியும், சுற்றுலா அபிவிருத்திக்கு நிலைபேறுள்ள எரிசக்தியின் முக்கியத்துவம் பற்றியும் விளக்கும் ஒரு கருத்தரங்கு பிரதேச பொருளாதார அபிவிருத்தி முகவரமைப்பினால் கண்டி ஹோட்டல் பாடசாலை முன்றலில் ஒழுங்கு செய்யப்பட்டது. கடற்கரையை துப்பரவு செய்யும் ஒரு நிகழ்ச்சித் திட்டம் இளம் சூழியலாளர்கள் சங்கத்தின் உதவியுடன் களுத்துறை களிடோ கடற் கரையில் ஒழுங்கு செய்யப்பட்டது.

• **கொழும்பு மரதன் - 2012 ஒக்டோபர் 06**

கொழும்பு மரதன் ஓட்டப் போட்டி இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தின் உதவியுடன் லங்கா ஸ்போட்ரெய்சன் நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டது. சுற்றுலா பணியகம் வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசில்களை வழங்க அனுசரணை வழங்கியது.

• சுற்றுலா சார்ந்த தகவல்களை பயணிகளுக்கு வழங்கும் வகையில் 2012 மார்ச் 19ம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பயணத் தகவல்களை வழங்கும் 8 கணினிக் கட்டமைப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன.

• **தம்பானை, கொட்டபாக்கினிய பிரதேசத்தில் 2012 ஏப்ரல் 24ம் திகதி சுதேச சுற்றுலாத் துறை ஊக்குவிப்பு நிகழ்ச்சி**

• **பயணிகளை வரவேற்கும் கப்பல்கள்**

கப்பலின் பெயர்	கொழும்பு துறைமுகத்திற்கு வருகை தரும் தினம்	பயணிகளின் எண்ணிக்கை
ஓஷியானியா நோட்டிக்கா	ஜனவரி 17 - 18	700
சில்வர் விஷ்பர்	பெப்ரவரி 23	1000
ஓரோரா	மார்ச் 14	1950
குயீன் எலிசெபத்	மார்ச் 30	1890

பொதுத் தொடர்பு மற்றும் ஊடக பிரச்சாரம்

இலங்கையின் சுற்றுலா அடைவிடம் தொடர்பான தகவல்களை திரட்டி அவற்றை பிரச்சாரம் செய்வதற்காக கீழ்வரும் நாடுகளைச் சேர்ந்த ஊடயவியலாளர்கள் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தினால் அழைக்கப்பட்டு உபசரிக்கப்பட்டனர்.

வருகை தந்த ஊடகவியலாளர்கள் பற்றிய விபரம் நாடுகள் வரிசையில் - 2012

நாடு	ஊடகவியலாளர்களின் எண்ணிக்கை
சீனா	27
ஐக்கிய இராச்சியம்	25
பெல்ஜியம்	3
இந்தியா	19
போலாந்து	8
பின்லாந்து	2
ஜப்பான்	2
ஜேர்மனி	7
துருக்கி	2
ஸ்பெயின்	7
ரஷ்யா	29
டுபாய்	7
பஹ்ரைன்	8
மலேஷியா	14
கொரியா	4
பிரான்ஸ்	4
ஜோர்தான்	3
தாய்வான்	6
ஓமான்	2
சிங்கப்பூர்	5
இந்தோனேசியா	5
பிலிப்பைன்ஸ்	3
செக் குடியரசு	2
யுக்ரேன்	5
குரோஷியா	2
சேர்பியா	1
எகிப்து	1
ஹங்கேரி	1
தாய்லாந்து	2
சவுதி அரேபியா	1
அமெரிக்கா	3
அவுஸ்திரேலியா	1
பங்களாதேஷ்	2
லெபனான்	1
ஹொங்கொங்	7
நெதர்லாந்து	5
மொத்தம்	**226**

2012 ஊடக அறிமுக சுற்றுப் பயணம்

- சீனா
- ஐக்கிய இராச்சியம்
- பெல்ஜியம்
- இந்தியா
- போலாந்து
- பின்லாந்து
- ஜப்பான்
- ஜேர்மனி
- துருக்கி
- ஸ்பெயின்
- ரஷ்யா
- டுபாய்
- பஹ்ரைன்
- மலேஷியா
- கொரியா
- பிரான்ஸ்
- ஜோர்தான்
- தாய்வான்
- ஓமான்
- சிங்கப்பூர்
- இந்தோனேசியா
- பிலிப்பைன்ஸ்
- செக் குடியரசு
- யுக்ரேன்
- குரோஷியா
- சேர்பியா
- எகிப்து
- ஹங்கேரி
- தாய்லாந்து
- சவுதி அரேபியா
- அமெரிக்கா
- அவுஸ்திரேலியா
- பங்களாதேஷ்
- லெபனான்
- ஹொங்கொங்
- நெதர்லாந்து
- மொத்தம்

ஊடகவியலாளர்களின் மொத்த எண்ணிக்கை = 226

அறிமுக சுற்றுப் பயணங்களின் மொத்த எண்ணிக்கை = 78

நாடுகளின் மொத்த எண்ணிக்கை = 36

ஊடகப் பிரச்சாரத்திற்கான மொத்த செலவினம்

ரூபா. 676,725,143.50

அமெரிக்க டொலர் 5,143,801.148

வருகை தந்திருந்த பெரியளவிலான வெளியீடுகளும், தொலைக்காட்சி அலைவரிசைகளும் - 2012

சீனா
சீனா நாளிதழ்
பொட்டோகிராபிக் ட்ரவல்லர்
எக்கெனமிக் டெய்லி
ஜியங் க்சி 7 அலைவரிசை

ஐக்கிய இராச்சியம்
த ட்ரவல்லர் அலைவரிசை
ப்ளேனட் எப்படைட் நாளிதழ்
பீ.பீ.சி இயற்கை உலகம்
த சன்
TUI அலைவரிசை

ஜேர்மனி
FERNWEH தொலைக்காட்சி
SWR 2/BR 2 வானொலி
ரைசன் எக்ஸ்கிளுசிவ்

இந்தியா
ஷிர்தி டெலிவிஸ்டஸ்
மாத்ரு பூமி சஞ்சிகை

ரஷ்யா
VGTK மை ப்ளேனட்
தொலைக்காட்சி அலைவரிசை
நெஷனல் ஜோக்ரபிக் ரஷ்யா
இன்டர்பெக்ஸ் செய்தி முகவரகம்

ஸ்பெயின்
ரெவிஸ்டா வெனிட்டாஸ்
லா ரேசன்

பிரான்ஸ்
பட்லீ ப்ரொடக்ஷன் பிரான்ஸ்
க்ளோப் குக்கர் தொலைக்காட்சித் தொடர்

travelife
Everywhere you want to
THE BEST ROAD TRIPS
SCOTLAND
TAWI-TAWI
AUSTRALIA
Exploring the Great South
VENICE
The secret canals and alleys
AMAZING
SRI LANKA
Everything you need to know
DESTINATIONS OF THE WORLD
news
SALVATORE FERRAGAMO
THE SUGAR ISLES
THAILAND
VANCOUVER
NEW IN TOWN
GOOD TASTE
Ceylon revisited
保存版ダイビングガイド
新たなムーヴメントの予感
スリランカ
SRI LANKA DIVE GUIDE
SABATO
摄影旅游
ROAM
IN THE RAIL
道中慢行
旅行社
2012
CHINA TRAVEL AGENT
BTG

"ONE OF THE WORLD'S TOP 5 DESTINATIONS FOR 2012"
CONDE NAST TRAVELLER MAGAZINE
"HOME TO 8 WORLD HERITAGE SITES"
UNESCO
"NO. 1 TRAVEL DESTINATION OF THE YEAR!"
NEW YORK TIMES, 2010
"NO. 2 IN THE LIST OF TOP 20 TOURIST DESTINATIONS FOR 2010"
NATIONAL GEOGRAPHIC
"ONE OF THE TOP 6 DESTINATIONS FOR TRAVEL IN 2012"
NATIONAL GEOGRAPHIC TRAVELLER MAGAZINE
"ONE OF THE TOP 5 DESTINATIONS WHERE UK CUSTOMERS WANT TO SPEND THEIR HOLIDAY"
KUONI ANNUAL TRAVEL TRENDS REPORT
Refreshingly
srilanka
WONDER OF ASIA
www.srilanka.travel

இலங்கை பற்றிய சர்வதேச சான்று உறுதிகள்

இலங்கை - ஆசியாவின் உண்மையான ஒரு அதிசயம்
"2012ம் ஆண்டில் சுற்றுப் பயணம் மேற்கொள்வதற்கான
அடைவிடங்களைக் கொண்ட உலகின்
ஐந்து முன்னணி நாடுகள் மத்தியில் இலங்கை"

HELLO! hellomagazine.com - HELLO Magazine – UK

"2012ம் ஆண்டில் உலகின் 5
முன்னணி அடைவிடங்களில் ஒன்று"

- Conde Nast Traveller Magazine Condé Nast Traveller

"2012ஆம் ஆண்டில் சுற்றுப் பயணம்
மேற்கொள்ளக்கூடிய 20 அடைவிடங்களில் 2ம் இடம்"

NATIONAL GEOGRAPHIC CHANNEL - National Geographic Channel

"2012ஆம் ஆண்டில் சுற்றுப் பயணம் மேற்கொள்ளக்கூடிய
06 முன்னணி அடைவிடங்களில் ஒன்று"

- National Geographic Traveler Magazine NATIONAL GEOGRAPHIC TRAVELER

"ஐக்கிய இராச்சியத்தின் வாடிக்கையாளர்கள் தமது விடுமுறையை கழிப்பதற்கு
விரும்பும் 5 முன்னணி சுற்றுலா அடைவிடங்களில் ஒன்று"

KUONI - KUONI Annual Report

"இலங்கை பணத்தை செலவிடும் பெறுமதிக்கேற்ற சுற்றுலா அடைவிடம்"

- Post Office Travel Money's 2012 Long Haul Holiday Report - UK



"2013ம் ஆண்டில் முதல்தர சுற்றுலா அடைவிடம்"

lonely planet - Lonely Planet
(10 முன்னணி நாடுகளின்
பட்டியல் 2012ம் ஆண்டில்
பிரகடனப்படுத்தப்பட்டது)

நிதி அறிக்கை 2012

2012 டிசம்பர் 31ம் திகதியன்று இருந்தவாறு நிதி நிலைமை பற்றிய கூற்று

	குறிப்பு	2012 ரூபா.	2011 ரூபா.
சொத்துக்கள்			
நடைமுறைச் சொத்துக்கள்			
பணமும் பணத்திற்கான பிரதியீடுகளும்	3	1,528,741,158.65	819,853,581.02
கிடைக்கக் கூடியவைகள்	4	481,324,185.60	340,609,153.97
முன் பெறு தொகை	5	2,158,930.19	3,403,093.20
முற் கொடுப்பனவுகள்	6	2,808,927.56	231,123.85
கடன் பெற்றவர்கள்	7	2,470,887.89	34,067,741.85
கையிருப்பு		9,632,954.28	6,996,488.48
		2,027,137,044.17	1,205,161,182.37
நடைமுறையற்ற சொத்துக்கள்			
சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்கள்	8	14,206,290.25	15,485,923.32
		14,206,290.25	15,485,923.32
மொத்த சொத்துக்கள்		**2,041,343,334.42**	**1,220,647,105.69**
பொறுப்புக்கள்			
நடைமுறை பொறுப்புக்கள்			
வருவாய்க்கு முந்திய கொடுப்பனவுகள்	9	11,456,793.25	5,585,302.75
செலுத்தக் கூடிய வைப்புக்கள்	10	663,267.59	552,667.74
ஊழியர்களின் அனுகூலங்கள்	11	5,167,304.33	5,996,352.63
திரட்டிய செலவினம்		670,435,841.48	330,138,622.93
கடனாளிகள்	12	24,425,221.80	25,388,355.74
		712,148,428.45	367,661,301.79
நடைமுறையற்ற பொறுப்புக்கள்			
நீண்டகால கடன் பெறுகைகள்		-	-
		-	-
மொத்த பொறுப்புக்கள்		**712,148,428.45**	**367,661,301.79**
தேறிய சொத்துக்கள்		**1,329,194,905.97**	**852,985,803.90**
தேறிய சொத்துக்கள்/பங்குகள்			
மூலதனப் பங்களிப்பு		33,069,156.52	33,069,156.52
திரட்டிய மிகைகள் / (பற்றாக்குறை)		1,296,125,749.45	819,916,647.38
மொத்த தேறிய சொத்துக்கள்/பங்குகள்		**1,329,194,905.97**	**852,985,803.90**

எம். எம். ஜே. ஆர். என். பெர்னாந்து
பதில் பணிப்பாளர் - நிதி
இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம்

பீ. குணரத்ன
தலைவர்
இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம்

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம்
2012ம் ஆண்டு டிசம்பர் 31ம் திகதியுடன் நிறைவு பெற்ற ஆண்டுக்கான நிதி செயலாற்றுகை பற்றிய கூற்று

	குறிப்பு	2012 ரூபா.	2011 ரூபா.
வருமானம்			
கப்பலேற்றுவதற்கு முன் தீர்வை		813,179,959.92	729,174,937.13
சுற்றுலா அபிவிருத்தி தீர்வை		566,312,922.14	454,839,489.53
ஏனைய வருமானம்	13	64,634,339.12	64,244,603.59
மொத்த வருமானம்		**1,444,127,221.18**	**1,248,259,030.25**
செலவினம்			
கூலி, சம்பளம் மற்றும் தொழிலாளர் நன்மைகள்	14	28,630,428.07	25,892,216.97
பாவிக்கப்பட்ட விநியோக மற்றும் பாவனைப் பொருட்கள்	15	57,968,737.39	30,642,068.39
வியாபாரம் சார்ந்த செலவினம் - வெளிநாடு	16	12,430,227.19	30,683,670.87
வியாபாரம் சார்ந்த செலவினம் - உள்நாட்டு	17	863,953,765.69	584,620,324.40
பெறுமானத் தேய்வு செலவினங்கள்		3,824,709.19	3,978,586.48
ஏனைய செலவினங்கள்	18	1,067,206.29	14,955,568.84
நிதிச் செலவுகள்	19	43,045.01	5,940,680.17
மொத்த செலவினம்		**967,918,118.83**	**696,713,116.12**
குறிப்பிட்ட காலப் பகுதிக்கான மிகை/பற்றாக்குறை		476,209,102.35	551,545,914.13
முன் கொண்டுவரப்பட்ட மிகை/பற்றாக்குறை		819,916,647.10	268,370,733.25
முன்னெடுக்கப்படும் மிகை/துண்டுவிழும் தொகை		**1,296,125,749.45**	**819,916,647.38**

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம்
2012ம் ஆண்டு டிசம்பர் 31ம் திகதியுடன் நிறைவு பெற்ற ஆண்டுக்கான நிகர சொத்துக்களில்/பங்குகளில் உள்ள மாற்றங்கள் பற்றிய கூற்று

	பங்களிக்கும் மூலதனம்	திரட்டப்பட்ட மிகை/ துண்டுவிழும் தொகை	மொத்தம்
2011, ஜனவரி 01ம் திகதியன்று நிலுவை	33,069,156.52	819,916,647.38	852,985,803.90
இந்தக் காலப்பகுதியில் மிகை/பற்றாக்குறை	-	-	-
மறு விளக்க அறிக்கை		(106,865,657.28)	(106,865,657.28)
2011, டிசம்பர் 31ம் திகதியன்று மறு விளக்கமளிக்கப்பட்ட நிலுவை	33,069,156.52	713,050,990.10	746,120,146.62
இந்தக் காலப் பகுதிக்கான மிகை/பற்றாக்குறை	-	476,209,102.35	476,209,102.35
2012 டிசம்பர் 31ம் திகதியன்று நிலுவை	33,069,156.52	1,189,260,092.45	1,222,329,248.97

முந்திய வருட வருமானம் 6003 - 2012	(103,895.22)
முந்திய வருட செலவினம் - 7662- 2010	106,969,552.50
வித்தியாசம்	106,865,657.28

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம்
2012ம் ஆண்டு டிசம்பர் 31ம் திகதியுடன் நிறைவு பெற்ற ஆண்டுக்கான காசுப் பாய்ச்சல் கூற்று

	2012 ரூபா.	2011 ரூபா.
தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்		
மிகை /பற்றாக்குறை	476,209,102.35	658,411,571.41
பணம் சாரா தொழிற்பாடுகள்		
பெறுமானத் தேய்வு	3,824,709.19	3,978,586.48
ஊழியர் கடனிலிருந்து வட்டி	(72,214.13)	(68,503.38)
பணிக்கொடை வழங்குதல்	(829,048.30)	991,715.13
வருவாயை /இழப்பை பரிமாற்றுக் கொள்ளுதல்	-	42,924.00
நட்டங்களும், தள்ளுபடிகளும்	-	108,737.97
கிடைக்கப் பெறுபவற்றில் அதிகரிப்பு /வீழ்ச்சி	(140,715,031.63)	29,784,897.13
முன் பெறு தொகையில் அதிகரிப்பு /வீழ்ச்சி	1,244,163.01	(1,374,922.78)
முற்கொடுப்பனவுகளில் அதிகரிப்பு /வீழ்ச்சி	(2,577,803.71)	1,309,135.52
கடன் பற்றுக்களின் அதிகரிப்பு /வீழ்ச்சி	31,596,853.96	(916,172.95)
கையிருப்புக்களில் அதிகரிப்பு /வீழ்ச்சி	(2,636,466.08)	(3,472,068.99)
முற்கூட்டி பெறப்பட்ட வருமானத்தில் அதிகரிப்பு /வீழ்ச்சி	5,871,490.50	(1,831,756.96)
செலுத்தக் கூடிய வைப்புக்களில் அதிகரிப்பு /வீழ்ச்சி	110,599.85	(425,399.34)
செலுத்தக் கூடிய வைப்புக்களில் அதிகரிப்பு/வீழ்ச்சி	340,297,218.57	184,404,972.86
திரட்டிய செலவினங்களில் அதிகரிப்பு/வீழ்ச்சி	(963,133.94)	(160,384,944.26)
கடனாளிகளில் அதிகரிப்பு/வீழ்ச்சி	72,214.13	68,503.38
தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் நிகர காசுப் பாய்ச்சல்	711,432,653.77	710,616,511.20
முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து காசுப் பாய்ச்சல்		
சொத்து, இயந்திரத் தொகுதி, உபகரணம் என்பவற்றின் கொள்வனவு	(2,545,076.14)	(1,553,782.00)
முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து காசுப் பாய்ச்சல்	(2,545,076.14)	(1,553,782.00)
நிதி நடவடிக்கைகளில் இருந்து காசுப் பாய்ச்சல்		
செலுத்தி முடித்த கடன் பற்றுக்கள்	-	(66,666,666.68)
முதலீட்டு நடவடிக்கைகளில் தேறிய காசுப் பாய்ச்சல்	-	(66,666,666.68)
பணம் மற்றும் பண பிரதியீடுகளில் உள்ள நிகர வளர்ச்சி/வீழ்ச்சி	708,887,577.63	642,396,062.52
இந்தக் காலப் பகுதியின் ஆரம்பத்தில் பணமும்/பணப் பிரதியீடுகளும்	819,853,581.02	177,457,518.50
இந்தக் காலப் பகுதியின் நிறைவில் பணமும். பணத்திற்கு நிகரான பிரதியீடுகளும்	1,528,741,158.65	819,853,581.02

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம்
2012 நிதிக் கூற்றுக்கான குறிப்புக்கள்

1. நிறுவனத்தின் விபரம்

1.1 கூட்டிணைவு

2005ம் ஆண்டு 38ம் இலக்க சுற்றுலாச் சட்டமூலம் 2007ம் ஆண்டு ஒக்டோபர் முதலாம் திகதி அமுலுக்கு வரும் வகையில் அமுல்படுத்தப்பட்டது. புதிய நிறுவனங்கள் கீழ்வருமாறு 2007ம் ஆண்டு, ஒக்டோபர் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் கூட்டிணைக்கப்பட்டது.

- இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை
- இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம்
- சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவத்திற்கான இலங்கை நிறுவகம்
- இலங்கை மாநாட்டு பணியகம்

1.2 தயார்படுத்தல் மற்றும் கணக்கீட்டு கொள்கைகள்

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்குரிய இலங்கை நிதி அறிக்கையிடல் தரநியமத்தின் பிரிவு 1.1 இற்கு அமைய, இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் விதிவிலக்களிக்கப்பட்டுள்ள நிறுவனங்களின் கீழ் வர முடியாது. அதனால், நிதிக் கூற்றுக்கள் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்திற்கு இணைவாக நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

1.3 சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான இலங்கை நிதி அறிக்கையிடல் தரநியமத்திற்கு ஏற்ப மாறுபடுவது பற்றிய விளக்கம்

2012ம் ஆண்டுக்கான இந்த நிதிக் கூற்றுக்களே சிறிய மற்றம் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கான இலங்கை நிதி அறிக்கையிடல் தரநியமத்திற்கு இணங்கும் முதலாவது நிதிக் கூற்றுக்களாகும். சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்காக இ.நி.அ.தர நியமத்திற்கு ஏற்ப மாற்றிக் கொள்ளும் திகதி 2011 ஜனவரி முதலாம் திகதி என நிர்ணயிக்கப்பட்டது. இலங்கை நிருவாக சேவையுடன் இணங்கி தயாரிக்கப்பட்ட கடைசி நிதிக்கூற்றுக்கள் 2011 டிசம்பர் 31ம் திகதியுடன் நிறைவு பெற்றது.

1.4 சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் விநியோகம்

சுற்றுலா சட்டமூலத்தின் 23 (1) பிரிவின்படி இலங்கையை ஒரு சுற்றுலா அடைவிடமாக மாற்றிமைக்கும் வகையில் ஊக்குவிப்பு மற்றும் சந்தைப்படுத்தலுக்காக சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தை பயன்படுத்தலாம். இந்த நிதியம் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் முகாமை செய்யப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றது.

சுற்றுலா சட்டத்தின் பிரிவு 24 (8) இன் படி நிதி கீழ்வரும் வீதப்படி பகிர்ந்தளிக்கப்படுகின்றது.

உள்நாட்டு அதிகார அமைப்பு	வழங்கக்கூடிய வீதம்
இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை	14%
இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம்	70%
சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவத்திற்கான இலங்கை நிறுவகம்	12%
இலங்கை மாநாட்டு பணியகம்	4%

1.5 பிரதான நடவடிக்கைகளும் தொழிற்பாடுகளின் இயல்பும்

அழகிய கடற் கரைகள், அன்பான சினேகபூர்வமான மக்கள், சிறந்த இயற்கை, கலாசாரம் மற்றும் சாகச முயற்சிகளுக்கான வாய்ப்புக்களைக் கொண்டுள்ள இலங்கையை ஆசியாவின் மிகவும் வளம்பொருந்திய பசுமையான தீவாக இலங்கையை மாற்றியமைத்து ஆசியாவின் சுற்றுலா மையமாக அதன் நற்பெயரை முன்னேற்றி சுற்றுலாத் துறையுடன் சம்பந்தப்பட்டவர்களும், இலங்கை மக்களும் நன்மையடையக் கூடிய வயில் மிகப் பெரிய வெளிநாட்டு செலாவணியை ஈட்டும் துறையாக மாற்றியமைத்தல்.

1.6 ஊழியர்களின் எண்ணிக்கை

2012 டிசம்பர் 31ம் திகதியில் இருந்ததற்கு அமைய ஊழியர்களின் சராசரி எண்ணிக்கை 41 ஆகும்.

1.7 அளவீட்டு முறை

நிலவும் செலவினத்திற்கு அமைய நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றன.

1.8 தற்போதைய நாணய அலகு

தற்போதைய நாணய அலகாக விளங்கும் இலங்கை ரூபாவில் அனைத்து நிதி கூற்றுக்களும் தயாரிக்கப்படுகின்றன.

1.9 மதிப்பீடுகள் மற்றும் தீர்வுகளின் பயன்பாடு

கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரயோகத்திலும் சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்களின் தொகைகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய தீர்வுகள், மதிப்பீடுகள் மற்றும் கருதுகோல்களை உருவாக்குவதற்காக முகாமைத்துவத்திற்கு தேவைப்படும் இலங்கை கணக்கீட்டு தரநியமங்களுக்கு அமைய நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றன. இந்த மதிப்பீடுகளில் இருந்து உண்மையான முடிவுகள் வித்தியாசப்படலாம்.

மதிப்பீடுகளும், அனுமானங்களும் தற்போதைய அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றன. கணக்கீட்டு மதிப்பீடுகளின் மீளாய்வானது அந்த மதிப்பீடுகள் திருத்தியமைக்கப்படும் காலப் பகுதியிலும், அதன் தாக்கம் உணரப்படும் எந்தவொரு எதிர்கால காலப் பகுதியிலும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

நிதிக் கூற்றுக்களில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள தொகைகளில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் கணக்கீட்டுக் கொள்கைகளை பிரயோகிப்பதில் உள்ள முக்கிய தீர்வுகள் பற்றிய தகவல்களும், எதிர்காலத்தில் பொருள்சார் திருத்தங்களை மேற்கொள்வதில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள அனுமானங்கள் மற்றும் மதிப்பீடுகளின் நிச்சயமற்றதன்மைகள் பற்றிய தகவல்களும் அந்தந்த குறிப்புக்களில் உள்ளடக்கப்படுகின்றன.

1.10 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இலங்கை கணக்கீட்டு தரநியமங்களுக்கு அமைய இந்த நிதிக் கூற்றுக்களை தயாரித்து அவற்றை நியாயமாக முன்வைக்கும் பொறுப்பு முகாமைத்துவத்திற்கு உண்டு. இதன்படி, வடிவமைத்தல், அமுல்படுத்தல், தயார்படுத்தலுடன் சம்பந்தப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டை நிர்வகித்தல், நிதிக் கூற்றுக்களை நியாயமான முறையில் முன்வைத்தல், பொருத்தமான கணக்கீட்டு கொள்கைகளை தெரிவு செய்து பிரயோகித்தல், சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப நியாயமான விதத்தில் கணக்கீட்டு மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல் போன்ற பொறுப்புக்கள் முகாமைத்துவத்திற்கு காணப்படுகின்றது.

1.11 ஐந்தொகை திகதிக்கு பின்னரான நிகழ்வுகள்

ஐந்தொகை திகதிக்கு பின்னர் உள்ள அனைத்து பொருள்சார் நிகழ்வுகளும் கருத்திற் கொள்ளப்பட்டு நிதிக் கூற்றுக்களில் பெருத்தமான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1.12 ஒப்பீட்டுத் தகவல்கள்

தேவைப்படும் போது நடப்பு ஆண்டின் முன்வைப்புக்கு பொருத்தமான விதத்தில் சம்பந்தப்பட்ட ஒப்பீட்டு தொகைகள் மீள வகுக்கப்பட்டுள்ளன.

2. முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள்

2.1 இருப்புக்கள்

சரக்கு இருப்புக்கள் பொதுவாக செலவில் அல்லது உணரக் கூடிய பெறுமதியில் மதிப்பிடப்படுகின்றன.

2.2 பெறுமானத் தேய்வு

பெறுமானத் தேய்வானது அனைத்து சொத்துக்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் செலவின் அடிப்படையில் அல்லது பெறுமதியின் அடிப்படையில் கணிப்பிடப்படுகின்றது. கீழ்வருமாறு குறிப்பிட்ட பொருள் கையேற்கப்பட்ட தினத்திலிருந்து அதன் பாவனை மீதான மதிப்பீட்டின் அடிப்படையில் அதற்குரிய செலவினம் அல்லது பெறுமதி கழிக்கப்படுகின்றது.

விபரம்	வீதம்
தளபாடம் மற்றும் பொருத்தல்கள்	7.5%
கணினி மற்றும் கருவிகள்	25%
மோட்டார் வாகனங்கள்	25%
குளிரூட்டல் கருவி	7.5%
அலுவலக உபகரணங்கள்	7.5%
தொலைபேசி	7.5%
பல்வகை உபகரணங்கள்	7.5%
மென்பொருள்	7.5%
கட்டிட விருத்தி	10%

2.3 சொத்து, இயந்தித் தொகுதி மற்றும் உபகரணங்கள்

சொத்துக்கள், இயந்திங்கள் மற்றும் உபகரணங்கள் திரட்டப்பட்ட பெறுமானத் தேய்வு மற்றும் ஈடு செய்ய முடியாத இழப்புக்களை கழித்து வரும் செலவினத்தில் மதிப்பிடப்படுகின்றது.

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தின் நிலம் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபைக்கு உரித்தானதாகும்.

2.4 வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்கள்

இந்த கொடுக்கல் வாங்கல்கள் கீழ்வரும் அளவீட்டில் மாற்றப்படுகின்றன.

- சிட்டைகளும் கொடுப்பனவுகளும் - உண்மையான அளவீட்டில்
- நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் - முடிவுப் பெறுமதியில்
- நிலையான சொத்துக்கள் - உண்மையான பெறுமதியில்
- வெளிநாட்டு செலாவனிகள் - உண்மையான பெறுமதியில்

2.5 சம்பந்தப்பட்ட தரப்பின் கொடுக்கல்வாங்கல்கள்

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கான இலங்கை நிதி அறிக்கையிடல் தரநியமங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வெளிப்படுத்துவதற்கு எந்தவொரு சம்பந்தப்பட்ட தரப்பின் கொடுக்கல் வாங்கலும் இல்லை.

2.5 பணிக்கொடை வழங்கல்

ஒரு வருட கால சேவையை பூர்த்தி செய்த அனைத்து ஊழியர்களுக்கும் 1983ம் ஆண்டு 12ம் இலக்க பணிக்கொடை வழங்கல் சட்டத்தின் கீழ் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும். இதற்கமைய, இலங்கை கணக்கீட்டு தரநியமங்களின் படி பணிக்கொடை கணக்கின் அடிப்படையில் இந்தக் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.

2.7 மிகையான செலவினம்

கணக்கீட்டு தரநியமங்களுக்கு அமைய, பொருட்கள் அல்லது சேவைகளுக்காக பெற்றுக் கொள்ளப்பட்டு அல்லது வழங்கப்பட்டு ஆனால் அதற்குரிய பெறுமானம் செலுத்தப்பட்டிருக்காத, விலைச் சிட்டையாக வருமானத்தில் சேர்க்கப்படாத அல்லது விநியோகஸ்தருடன் முறையாக இணங்கிக் கொள்ளப்படாத கொடுப்பனவுக்குரிய பொறுப்புக்களே மிகைச் செலவினம் என விபரிக்கப்பட்டுள்ளது. அதனால், நிதி மற்றும் கணக்கீட்டு நிறுவனத்தின் கணக்கில் செலுத்த வேண்டிய செலவினமாக காட்டப்பட்டுள்ள தொகை மேற்குறிப்பிட்ட வரைவிலக்கணத்தின் படி ஒரு மிகை செலவினமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

2.8 வரி அறவீடு

1979ஆம் ஆண்டு 28ம இலக்க உள்நாட்டு வருமான சட்டத்தின் பிரிவு 8 (a) (xx) இன் படி சுற்றுலா சபை வருமான வரி செலுத்துவதில் இருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. எனினும், 2002ம் ஆண்டு 10ம் இலக்க உள்நாட்டு வருமான திருத்த சட்டத்தின் படி இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்திற்குரிய இலாப நட்டங்கள் பற்றிய விபரம் உள்நாட்டு வருமான திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் வரி செலுத்தக் கூடிய நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை என உள்நாட்டு வருமான திணைக்களம் தீர்மானத்தது. இதனால், பெறுமதி சேர் வரிக்கான பணத்தை மீள கோர முடியாதுள்ளது. இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் 2012.02.21 அன்று உள்நாட்டு வருமான திணைக்களத்திடமிருந்து ஒரு கடிதத்தை பெற்றுக் கொண்டது. அதன்படி இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் வரி செலுத்தக் கூடிய நடவடிக்கையில் ஈடுபடவில்லை என்றும், பெறுமதி சேர் வரிக்கான நிதியை மீள கோர முடியாது என்றும் அறிவிக்கப்பட்டது.

2.9 ஏனைய வருமானம்

ஏனைய அனைத்து வருமானங்களும் ஒரு சரியான அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

வர்த்தக பங்களிப்பு என்பது இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்படும் வெளிநாட்டு வர்த்தக சந்தைகளில் தனிப்பட்ட பங்கேற்பாளர்களிடமிருந்து செலவினத்தை ஈடு செய்து கொள்வதை குறிக்கும்.

2.10 காசுப் பாய்ச்சல் கூற்று

இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு தர நியமங்களின் படி தயாரிக்கப்பட்டுள்ள காசுப் பாய்ச்சல் கூற்றுக்களுக்கு அமைய காசுப் பாய்ச்சல் கூற்றுக்களை தயாரிக்கும் மறைமுக முறையை பயன்படுத்தி காசுப் பாய்ச்சல் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. குறுகிய காலத்திற்குள் விரைவாக பணமாக மாற்றிக் கொள்ளக் கூடிய அதேவேளை, குறிப்பிடத்தக்க மாற்றங்கள் காரணமாக பெறுமதியில் மாற்றங்கள் ஏற்படாத முதலீடுகளே பணம் மற்றும் பணத்திற்கான பிரதியீடுகளாக கருதப்படுகின்றன. இதன்படி, கையிலுள்ள பணமும், வங்கிகளில் உள்ள நிலுவைகளும் பணமாகவும், பணத்திற்கான பிரதியீடுகளாகவும் கருதப்படுகின்றன.

2.11 முன் பெற்றுக் கொள்ளப்பட்ட தொகைகள்

முன் பெற்றுக் கொள்ளப்பட்ட கீழ் வரும் தொகைகள் நடைமுறைச் சொத்துக்களில் காட்டப்பட்டுள்ளன.

1.	வெளிநாட்டு முன் தொகை	ரூபா. 20,730.19
2.	உள்நாட்டு முன் தொகை	ரூபா. 2,138,200.00
	மொத்தம்	ரூபா. 2,158,930.19

நிதி மற்றும் கணக்கீட்டு செலவினம் செலுத்தப்படாததால், செலுத்தப்படாத தொகையாக உள்நாட்டு முன் தொகையில் 1,575,000.00 ரூபா உள்ளடக்கப்பட்டுள்ளது.

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம்
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

03. பணமும், பணத்திற்கான பிரதியீடுகளும்

விபரம்	2012 (ரூபா.)	2011 (ரூபா.)
வங்கியிலுள்ள பணம் - த.அ. பிரதான கணக்கு	1,293,691,266.25	728,520,593.19
வங்கியிலுள்ள பணம் - த.அ. தனியார் துறை	154,002,458.84	85,980,601.90
வங்கியிலுள்ள பணம் - கண்டி/ இயல் குத்தகைக்காரர்கள்	396,906.71	391,507.68
வங்கியிலுள்ள பணம் - வங்கி பணப்பரிமாற்றம்	-	5,105,096.42
வெளிநாட்டு அலுவலகம் - ஐ.இராச்சியம்	9,566.22	(222,918.53)
வெளிநாட்டு அலுவலகம் - இந்தியா	78,700.36	78,700.36
வங்கி பணம் செலுத்தற் தொகை - ஐ. இராச்சியம்	17,834,454.93	-
இடைவழியில் உள்ள பணம்	62,727,805.34	-
மொத்த பணமும், பணப் பிரதியீடுகளும்	1,528,741,158.65	819,853,581.02

04.0 கிடைக்கக் கூடியவைகள்

விபரம்	2012 (ரூபா.)	2011 (ரூபா.)
நுகர்வோர் சிற்றேடு – ஐ.இராச்சியம்	2,428,920.00	2,428,920.00
எரிபொருள் பண வைப்பு	100,000.00	100,000.00
வாகனக் வாடகை பண வைப்பு	20,000.00	20,000.00
ஹிக்கடுவ டிக்கட்டுக்கள்	876,000.00	876,000.00
ATM 2011 இடத்திற்கான செலவு	1,807,792.08	1,807,792.08
அமெரிக்கன் பிரீமியன் வோட்டர் சிஸ்டம்	4,000.00	-
ICLP மத்தியஸ்த நிலையம்	25,000.00	-
2011 உலக நறுமண உணவு திருவிழாவுக்கான அனுசரனை	-	750,000.00
கப்பலேற்றுவதற்கு முன்னரான தீர்வை	198,536,592.93	123,461,589.83
கட்டுநாயக்க வாடகைக்குரிய வங்கி உத்தரவாதம்	1,286,392.31	-
சுற்றுலா அபிவிருத்தி தீர்வை	275,909,488.28	211,152,119.56
சொத்து நிதி மற்றும் முதலீடு கண்டி	330,000.00	
ஏனையவை	-	12,732.50
மொத்த கிடைப்புக்கள்	481,324,185.60	340,609,153.97

05.0 முன் பெற்ற தொகை

விபரம்	2012 (ரூபா.)	2011 (ரூபா.)
உள்நாட்டு முன் தொகை	2,138,200.00	2,005,987.50
வெளிநாட்டு முன் தொகை	20,730.19	1,397,105.70
மொத்த முன் தொகைகள்	2,158,930.19	3,403,093.20

06.0 கொடுப்பனவுகள்

விபரம்	2012 (ரூபா.)	2011 (ரூபா.)
சேவை உடன்படிக்கை	53,633.87	-
நிதிப் பங்களிப்பு	1,426,411.05	56,304.78
வருடாந்த அங்கத்துவம் - ஐ.இராச்சியம்	1,328,882.64	174,819.07
மொத்த கொடுப்பனவுகள்	2,808,927.56	231,123.85

07.0 கடன் பற்றுக்கள்

விபரம்	2012 (ரூபா.)	2011 (ரூபா.)
சில்லரை பற்றுக்கள் - SLTDA	16,292.89	31,141,767.55
சில்லரை பற்றுக்கள் - SLITHM	-	658,734.30
ஊழியர்கள் கடன்களும், முன் பெறும் தொகைகளும்	2,454,595.00	2,267,240.00
ஏனைய கடன் பற்றுக்கள்	-	-
மொத்த கடன் பற்றுக்கள்	2,470,887.89	34,067,741.85

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

08.0 சொத்து, இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்

விபரம்	01.01.2012 அன்று இருந்த நிலுவை	அதிகரிப்புக்கள் 2012	பரிமாற்றங்கள் 2012	31.12.2012 அன்று இருந்த நிலுவை	01.01.2012 அன்று திரட்டிய பெறுமானத்தேய்வு	2012ம் ஆண்டுக்கான பெறுமானத்தேய்வு	கழிக்கப்பட்ட பெறுமானத் தேய்வு 2012	31.12.2012 அன்று திரட்டிய பெறுமானத்தேய்வு	நிகர புத்தகப் பெறுமதி
தளபாடம் மற்றும் பொருத்தல்கள்				-	-	-		-	-
கணிணி மற்றும் கருவிகள்	8,532,531.89	632,153.14	-	9,164,685.03	2,362,453.00	664,199.14	-	3,026,652.14	6,138,032.89
மோட்டார் வாகனங்கள்	707,823.00	61,216.00	-	769,039.00	79,598.96	55,715.66	-	135,314.62	633,724.38
குளிரூட்டல் கருவி	9,179,033.81	1,695,171.00	-	10,874,204.81	6,955,806.72	1,520,973.58	-	8,476,780.30	2,397,424.51
அலுவலக உபகரணங்கள்	2,982,522.50	151,616.00	-	3,134,138.50	678,326.29	278,875.24	-	957,201.53	2,176,936.97
தொலைபேசி	7,400,000.00	-	-	7,400,000.00	5,150,000.00	1,125,000.00	-	6,275,000.00	1,125,000.00
பல்வகை உபகரணங்கள்	867,750.00	-	-	867,750.00	194,106.71	65,081.25	-	259,187.96	608,562.04
மென்பொருள்	717,900.00	-	-	717,900.00	94,767.15	53,842.50	-	148,609.65	569,290.35
கட்டிட விருத்தி	809,135.35	4,920.00	-	814,055.35	195,714.42	61,021.82	-	256,736.24	557,319.11
மொத்தம்	**31,196,696.55**	**2,545,076.14**	**-**	**33,741,772.69**	**15,710,773.25**	**3,824,709.19**	**-**	**19,535,482.44**	**14,206,290.25**

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம்
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

09.0 முன்கூட்டி பெற்ற வருமானம்

விபரம்	2012 (ரூபா.)	2011 (ரூபா.)
வெளிநாட்டு வர்த்தக கண்காட்சி	11,456,793.25	5,585,302.75
மொத்த வருமானம்...	11,456,793.25	5,585,302.75

10.0 செலுத்தக் கூடிய வைப்புக்கள்

விபரம்	2012 (ரூபா.)	2011 (ரூபா.)
மீளபெறக்கூடிய வாடகை வைப்புக்கள்	337,080.00	353,080.00
செலுத்தக் கூடிய வைப்புக்கள்	193,553.40	193,553.40
ஏனையவை	132,634.19	6,034.34
செலுத்தக் கூடிய மொத்த வைப்பு	663,267.59	552,667.74

11.0 தொழிலாளர் நன்மைகள்

விபரம்	2012 (ரூபா.)	2011 (ரூபா.)
முன்கொண்டு வரப்பட்ட ஓய்வின் பணிக்கொடை வழங்கல்	5,996,352.63	5,004,637.50
பணிக்கொடை வழங்கல்	1,172,641.95	991,715.13
செலுத்தப்பட்ட பணிக்கொடையும் முந்திய வருட செயற்படுத்தலும்	2,001,690.25	-
மொத்த தொழிலாளர் நன்மைகள்	5,167,304.33	5,996,352.63

12.0 கடனாளிகள்

விபரம்	2012 (ரூபா.)	2011 (ரூபா.)
சில்லறை கடனாளிகள் - SLTDA	24,371,042.80	25,334,176.74
சில்லறைக் கடனாளிகள் - SLTTHM	54,179.00	54,179.00
மொத்த கடனாளிகள்	24,425,221.80	25,388,355.74

13.0 ஏனைய வருமானம்

விபரம்	2012 (ரூபா.)	2011 (ரூபா.)
இலக்கிய மற்றும் புகைப்பட சாதனங்களின் வருமானம்	-	86,900.00
வட்டி வருமானம் - ஊழியர்களுக்கான கடன்	72,214.13	68,503.38
வியாபார பங்களிப்பு	61,772,544.03	59,722,990.34
ஏனையவை	2,789,580.96	4,366,209.87
ஏனைய மொத்த வருமானம்	64,634,339.12	64,244,603.59

14.0 கூலிகள், சம்பளங்கள் மற்றும் தொழிலாளர் நன்மைகள்

விபரம்	2012 (ரூபா.)	2011 (ரூபா.)
சம்பளமும் கொடுப்பனவுகளும்	19,128,500.08	18,197,058.94
விடுமுறைக் கொடுப்பனவு	30,100.74	53,876.25
மேலதிக நேரம்	458,800.29	640,611.94
ஊ.சே.நிதியத்திற்கான சபையின் பங்களிப்பு	1,727,656.32	1,995,798.39
ஊ.ந.நிதியத்திற்கான சபையின் பங்களிப்பு	356,474.10	400,057.85
ஊழியர் நலன்புரி மற்றும் வருகைக்கான ஊக்குவிப்புத் தொகை	2,575,585.63	2,314,418.32
பயணம் - உள்நாடு	77,303.00	35,372.00
ஊழியர்களுக்கான சீருடை	40,873.60	145,461.00
பணிக்கொடை	1,184,634.20	917,312.13
காப்புறுதி	2,028,787.44	696,531.25
ஊழியர்களுக்கான பயிற்சிகள்	1,021,712.67	495,718.90
மொத்த கூலிகள், சம்பளங்கள் மற்றும் தொழிலாளர் நன்மைகள்	28,630,428.07	25,892,216.97

15.0 பாவிக்கப்பட்ட விநியோக மற்றும் நுகர்வுப் பொருட்கள்

விபரம்	2012 (ரூபா.)	2011 (ரூபா.)
சில்லறை விநியோகங்கள்	60,640.00	84,505.00
காகிதாதிகள்	1,166,786.48	1,150,805.98
தொலைபேசி மற்றும் இணையதளம்	1,686,566.09	1,646,812.13
அஞ்சல், கூரியர் மற்றும் முத்திரை	4,385,964.26	2,674,171.86
வாடகை - கட்டடம்	18,128,284.26	11,185,034.86
மின்சாரம்	3,822,357.21	3,240,751.64
நிர்வகிப்பு - உபகரணங்கள்	1,995,596.65	2,749,896.98
விளம்பரம் - பொது	14,308,046.28	194,790.00
நிர்வகிப்பு மற்றும் திருத்தங்கள் - வாகனங்கள்	1,281,033.85	1,133,562.42
வாகன வாடகை	6,591,906.70	2,191,533.95
நீர்	233,338.93	1,036,670.88
புத்தகங்கள் மற்றும் பருவகால இதழ்கள்	264,437.40	111,312.50
எரிபொருள் கட்டணங்கள்	1,055,710.21	779,502.25
களியாட்ட நிகழ்ச்சிகள் - உள்நாடு	113,072.77	100,913.07
துப்பரவு செய்யும் விநியோகஸ்தர்கள்	1,627,631.90	1,057,238.22
பாதுகாப்பு	874,209.61	445,678.86
நிர்வகிப்பு – கட்டடம்	256,084.79	613,347.79
விலையும் அனுமதிப்பத்திரமும்	11,100.00	5,430.00
உணவுப் பட்டியல்களும், மலர்களும்	105,970.00	240,110.00
பாவிக்கப்பட்ட மொத்த விநியோக மற்றும் நுகர்வுப் பொருட்கள்	57,968,737.39	30,642,068.39

16.0 வியாபாரம் சார்ந்த செலவினம் - வெளிநாடு

விபரம்	2012 (ரூபா.)	2011 (ரூபா.)
நிர்வாகம் ஐ. இராச்சியம்	12,430,227.19	30,683,670.87
மொத்த வியாபாரம் சார்ந்த செலவினம் - வெளிநாடு	12,430,227.19	30,683,670.87

17.0 வியாபாரம் சார்ந்த செலவினம் - உள்நாடு

விபரம்	2012 (ரூபா.)	2011 (ரூபா.)
ஊக்குவிப்புக்களும், விளம்பரமும் - வெளிநாடு	556,578,143.86	172,864,586.00
உள்நாட்டு விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சி	7,443,824.35	40,419,731.65
ஊக்குவிப்புக்களும், விளம்பரமும்	4,266,603.90	94,249,785.34
சுற்றுலா தொடர்பாடல் குறிப்பேட்டின் தயாரிப்பு	37,499,307.96	44,900,122.83
நிகழ்ச்சிகள்	44,653,294.32	44,798,652.93
வருகை தரும் ஊடகவியலாளர்களுக்கும் வர்த்தகர்களுக்குமான அறிமுக சுற்றுலாக்கள்	26,438,483.74	21,690,255.50
வழங்குரைஞர் கட்டணம் - பொதுத் தொடர்பு	-	22,737,070.92
நிர்வாக கட்டணமும், ஓவிய வேலையும்	5,033,408.00	5,464,671.05
சந்தைப்படுத்தல் ஆய்வு	84,386,307.79	1,170,961.03
வர்த்தக கண்காட்சி – ITB	32,565,827.37	32,412,178.74
வர்த்தக கண்காட்சி – WTM	29,868,208.62	35,360,792.60
இணையதள நிர்வகிப்பும் இலத்திரணியல் செய்திகளும்	1,693,973.42	1,098,432.46
இலங்கை விஜயம்	-	23,701,445.29
வருகை தருபவர்களுக்கான வசதிகளும், கவர்ச்சி அம்சங்களும்	9,502,353.04	41,606,046.00
இலாப நட்ட பரிமாற்றம்		42,924.00
தூதரங்களுடன் பணியாற்றுதல்	24,024,029.32	2,102,668.06
வியாபாரம் சார்ந்த மொத்த செலவினம் - உள்நாடு	863,953,765.69	584,620,324.40

18.0 ஏனைய செலவினங்கள்

விபரம்	2012 (ரூபா.)	2011 (ரூபா.)
சபை உறுப்பினர்களுக்கான கொடுப்பனவு	153,982.48	339,636.87
கொள்முதல் குழு உறுப்பினர்களுக்கான கொடுப்பனவு	122,050.00	65,500.00
கணக்காய்வு கட்டணம்	400,000.00	665,360.00
சட்ட விடயங்களுக்கான கட்டணம்	369,593.81	2,316.00
முத்திரை வரி	21,580.00	12,500.00
இழப்புக்களும், தள்ளுபடிகளும்	-	108,737.97
பெறுமதி சேர் வரி	-	11,495,693.39
தேச நிர்மான வரி	-	2,265,824.61
ஏனைய மொத்த செலவினங்கள்	1,067,206.29	14,955,568.84

19.0 Finance Costs

விபரம்	2012 (ரூபா.)	2011 (ரூபா.)
IIFA கடன் வட்டி மற்றும் வங்கிக் கட்டணங்கள்	-	5,722,138.69
வரவு வரி	-	172,943.48
வங்கிக் கட்டணங்கள்	43,045.01	45,598.00
மொத்த நிதிச் செலவுகள	43,045.01	5,940,680.17

20.0 ஒப்பீட்டுத் தகவல்கள்

நிதி நிலைமைக் கூற்று

	31/12/2011ல் குறிப்பிடப்பட்ட மிகுதி (ரூபா)	சீராக்கல் 2012 (ரூபா)	மீளக் குறிப்பிடப்பட்ட மிகுதி 31/12/2012 (ரூபா)
சொத்துக்கள்			
நடைமுறைப் பொறுப்புக்கள்			
திரட்டிய செலவினம்	223,272,965.65	106,865,657.28	330,138,622.93
நிதிசார் சாதிப்புக்கள் பற்றிய கூற்று			
வருமானம்			
ஏனைய மொத்த வருமானம்	64,244,678.25	(74.66)	64,244,603.59
செலவினம்			
கூலி, சம்பளம் மற்றும் ஊழியர் நன்மைகள்	26,121,005.89	(228,788.92)	25,892,216.97
பாவிக்கப்பட்ட விநியோக மற்றும் நுகர்வுப் பொருட்கள்	31,537,697.61	(895,629.22)	30,642,068.39
வர்த்தகம் சார்ந்த செலவினம் - வெளிநாடு	30,805,777.48	(122,106.61)	30,683,670.87
வர்த்தகம் சார்ந்த செலவினம் - உள்நாடு	477,546,792.44	107,073,531.96	584,620,324.40
ஏனைய செலவினங்கள்	14,612,648.09	342,920.75	14,955,568.84
நிதிச் செலவுகள்	5,245,025.51	695,654.66	5,940,680.17

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல / My No: டீஎம்/கே/எஸ்எல்டீபீ/எப்ஏ/2012

ඔබේ අංකය / உமது இல / Your No.:

දිනය / திகதி / Date: 2013 நவம்பர் 29

தலைவர்,
இலங்கை சுற்றுலாத்துறை மேம்பாட்டுப் பணியகம்

இலங்கை சுற்றுலாத்துறை மேம்பாட்டுப் பணியகத்தின் 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

இலங்கை சுற்றுலாத்துறை மேம்பாட்டுப் பணியகத்தின் 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிசார் நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் தேறிய சொத்து/ உரிமை மூலதன மாற்றக் கூற்றுக்கள், காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்கள் என்பவற்றின் பொழிப்பினை உள்ளடக்கிய 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலா அதிகாரச்சட்டத்தின் 20 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் பணியகத்தின் வருடாந்த அறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவானதொரு அறிக்கை பணியகத்தின் தலைவருக்கு 2013 ஆகஸ்ட் 21 ஆந் திகதியன்று வழங்கப்பட்டது.

1.2 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக் கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை நிதிசார் அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய தவறான கூற்றுக்கள் அல்லாத நிதிசார் கூற்றுக்களைத்

අංක 306/72 පොල්දූව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone: 2887028 -34
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No.: 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපෑල් / ஈ- மெயில் / E-mail.: oaggov@sltnet.lk

தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பணியகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பணியகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலிலை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 ஆம் 38 ஆம் ஆண்டின் நிதியதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவினது (3) ஆம் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் தீர்மானிப்பதற்கான அதிகாரத்தைக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிசார் கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிகளிற்கான நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை நிதிசார் அறிக்கையில் நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

விடயம்	இலங்கை கணக்கீட்டு நியமத்துடனான தொடர்பு	தேவை	இணங்காமை
கையிருப்புகள்	சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்கள் பிரிவு 13	(i) ஒரு நிறுவனம் கையிருப்புகளை குறைந்த கிரயத்திலும் மதிப்பிடப்பட்ட விற்பனை விலையிலும் அளவிடவேண்டும். இது	அசைவற்ற ரூபா 2,034,054 பெறுமதியான 27 பொருட்கள் கணக்கிற்குள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

பூர்த்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுவதற்குக் குறைந்த கிரயத்தில் அமைய வேண்டும்.

(ii) 2012 ஆம் ஆண்டினது ரூபா 419,556 க்கான முகாமைத்துவ டயறிகள் பெறுமதி பொருளிருப்புகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நன்கொடைகளாகிய ரூபா 1,128,000 நன்கொடையாகக் காட்டப்படுவதற்குப் பதிலாக வர்த்தகத் தொடர்புடைய செலவினமாகக் கணக்கிலிடப்பட்டிருந்தன.

(ஆ) 2010 ஒக்டோபர் 11 ஆந் திகதிய மு.க.அ/1/2010/01 ஆம் இலக்க சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக கணிப்பீட்டுத் தவறின் காரணமாக உத்தியோகத்தர் ஒருவருக்கு வெளிநாட்டுப் பயணப் படியாக ரூபா 149,265 மேலதிகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

2.2.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கட்டுப்பாட்டுக் கணக்கின் விபரம்		கணக்கின் பிரகாரமான மீதி	உப பதிவேட்டு விபரம்	உப பதிவேட்டின் பிரகாரமான மீதி	வித்தியாசம்
		ரூபா		ரூபா	ரூபா
இலங்கை அபிவிருத்தி	சுற்றுலாத்துறை அதிகாரசபைக்குக்	24,371,043	இலங்கை சுற்றுலா அபிவிருத்தி	26,948,539	2,577,496

கொடுப்பனவு செய்ய வேண்டியது		அதிகாரசபை இறுதிக் கணக்குகள்		
இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம்	54,179	இலங்கை சுற்றுலாத்துறை ஹோட்டல் முகாமைத்துவ நிறுவக இறுதிக் கணக்குகள்	44,484	9,695
இலங்கை சுற்றுலாத்துறை ஹோட்டல் முகாமைத்துவத்திற்கு செலுத்த வேண்டியவை	இல்லை	இலங்கை சுற்றுலாத்துறை ஹோட்டல் மற்றும் முகாமைத்துவ நிறுவகத்தின் இறுதிக் கணக்குகள்	4,417,949	4,417,949

2.2.4 பெறவேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முறையே 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளுக்கான கடன்கொடுத்தோர் தொகையாகிய ரூபா 2,827,822 மற்றும் ரூபா 8,980,922 என்பன தீர்த்து வைக்கப்படவில்லை.

(ஆ) சர்வதேச இந்திய திரைப்பட விருது விழா அமைப்பு நிறுவனத்திடமிருந்து பெறவேண்டிய தொகை சொல்லப்பட்ட நிறுவனத்திடமிருந்து பெறவேண்டியதாகக் கணக்கிலிடப்பட்டிருக்கவில்லை. கணக்காய்விற்குக் கிடைப்பதற்கிருந்த தகவல்களின் பிரகாரம், மேற்படி நிறுவனத்திற்காகப் பணியகம் வழங்கிய ஹோட்டல் அறை வசதிகளுக்கு கிட்டத்தட்ட ரூபா 20 மில்லியன் மேற்படி நிறுவனத்திடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்தது.

2.2.5 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வரும் ஒவ்வொரு விடயங்களுக்கெதிரே சுட்டிக்காட்டப்பட்ட சான்றுகள் இன்மையால் அவற்றைக் கணக்காய்விச் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

	விபரம்	பெறுமதி	கிடைக்கப்பெறாத சான்று
(அ)	வருகை தரும் பத்திரிகையாளருக்கான நிகழ்ச்சித் திட்டம்	26,438,483	நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களது எண்ணிக்கையும் ஊடகப் பிரசுர விபரங்களும்
(ஆ)	வர்த்தகக் கண்காட்சி இன்டர் நெஷனல் டிரவல் போர்ஸ்	32,565,827	விபரமான பட்டோலை
(இ)	வர்த்தகக் கண்காட்சி உலக பயணச் சந்தை	29,868,208	விபரமான பட்டோலை
(ஈ)	வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சால் செய்யப்பட்ட மேம்பாட்டுச் செலவினம்	55,427,296	பற்றுச் சீட்டுக்கள்
(உ)	முற்கொடுப்பனவுகள்	2,808,927	உறுதிப்படுத்தல்
(ஊ)	பெறவேண்டியவை	481,324,185	உறுதிப்படுத்தல்
(எ)	பொருளிப்புகள்	291,912	பௌதீக மெய்மையாய்வு அறிக்கைகள்

2.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு	இணங்காமை
(அ) 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாத்துறை அதிகாரச்சட்டத்தின் vii ஆம் அத்தியாயத்தின் 40 ஆம் பிரிவின் 09 ஆம் உப பிரிவு	ஒவ்வொரு ஆண்டினதும் மூன்று மாதகாலப் பூர்த்திக்கு முன்னரே பொருளாதார அபிவிருத்தி அமைச்சருக்குப் பின்வரும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. (அ) ஒரு பஞ்சாங்க ஆண்டின் ஏழு மாதகாலப் பூர்த்திக்கு முன்னரான அரையாண்டுக் கணக்குகளது பிரதியொன்று (ஆ) முன்னைய ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட திட்டம் தொடர்பாக எய்தப்பெற்றனவும் செயலாற்றலும் அடங்கிய கூற்று ஒன்று
(ஆ) 2003 ஜூன் 2 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க நல்ல ஆளுகைக்கான பொது முயற்சி வழிகாட்டல்கள் (i) அத்தியாயம் 5 பிரிவு 5.1.3	நிதியாண்டு தொடங்குவதற்கு 15 நாட்களுக்கு முன்னர் சபையால் அங்கீகரிக்கப்பட்டதும் நாளதுவரையாக்கப்பட்டதுமான கூட்டிணைந்த திட்டம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், பணியகம் இவ் வேண்டுகையுடன் இணங்கி நடக்க தவறியிருந்தது.

(ii)	அத்தியாயம் 9 பிரிவு 9.12	நிறுவனம் ஒன்றினால் கடைப்பிடிக்கப்படும் எந்தவொரு நலன்புரித் திட்டமும் பொதுத் திறைசேரியால் அங்கீகரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், ஊழியர் வைத்திய காப்புறுதித் திட்டத்திற்கான அங்கீகாரத்தைப் பணியகம் இதற்கேற்பப் பெறத்தவறியிருந்தது.
(iii)	அத்தியாயம் 9 பிரிவு 9.14.1	மனிதவள முகாமைத்துவம் தொடர்பான சகல விதிகளும் பிரமாணங்களும் திறைசேரிச் செயலாளரின் இசைவுடன் சபையால் அங்கீகரிக்கப்பட வேண்டும். எனினும், பணியகமானது இத்தேவைகளுக்கேற்ப நடக்கவில்லை.
(இ)	2006 ஜனவரி 25 ஆம் திகதிய 08 ஆம் இலக்க தேசிய கொள்வனவு முகவர் சுற்றறிக்கையின் 4 ஆம் அத்தியாயத்தினது 4.2.1(அ) மற்றும் (இ) பிரிவுகள்	அடுத்துவரும் ஆண்டிற்காக விரிவான திட்டத்துடன் குறைந்தது மூன்று ஆண்டுகளையாவது உள்ளடக்கும் விதத்தில் கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமாயினும், வேண்டப்பட்டவாறு அத்தகைய திட்டத்தைப் பணியகம் தயாரிக்கவில்லை.
(ஈ)	2011 ஜனவரி 11 ஆந் திகதிய PED/56 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை	அரச நிறுவனங்கள் மிகையாக உள்ள பணம் அடுத்துவரும் 6 மாதங்களுக்குத் தேவையான தொழிற்படு மூலதனத்தைக் கருத்திற்கொண்டதன் பின்னர் திரட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். எனினும், அவ்வாறாக மிகையாக உள்ள பணத்தைப் பணியகம் திரட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பின் பிரகாரம், மீளாய்வாண்டில் பணியகத்தின் மிகையாக உள்ள பணம் ஏறக்குறைய ரூபா 1,000 மில்லியன் ஆகும்.

(உ)	2002 நவம்பர் 28 ஆந் திதகதிய 1A1/2002/2 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கை	சுற்றறிக்கையில் குறிப்பிட்டவாறு, பணியகத்திற்கு சொந்தமான கணனிகள், கணனித் துணைப் பாகங்கள், மென் அணி என்பவற்றிற்கான நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படவில்லை.
(ஊ)	2011 பெப்ரவரி 11 ஆந் திகதிய PED/57 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை	சகல பொது முயற்சிகளும் ரூபா 100,000 க்கு மேற்பட்ட நன்கொடை/ உதவுதொகை என்பவற்றிற்கு மாண்புமிகு நிதி அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெறவேண்டும். எவ்வாறாயினும், அவ்வாறு அங்கீகாரத்தைப் பெறாது மீளாய்வாண்டின்போது இரு தனியார் நிறுவனங்களுக்கு ரூபா 1,128,000 நன்கொடையாக வழங்கப்பட்டிருந்தது.

3. நிதிசார் மீளாய்வு

3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம் 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற பணியகத்தின் செயற்பாட்டினால் விளைந்த மிகை ரூபா 476,209,102 ஐ இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 551,545,914 உடன் ஒப்பிடலாம். இது நிதிசார் விளைவுகளில் ரூபா 75,336,812 குறைவைக் காட்டுகின்றது. நிதிசார் விளைவுகளின் குறைவுக்கான முக்கிய காரணம் மொத்தச் செலவினத்தின் ரூபா 271,205,003 அதிகரிப்பே ஆகும்.

3.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு

முன்னைய ஆண்டின் ரூபா 1,248 மில்லியனுடன் ஒப்பிடப்பட்டவாறான மீளாய்வாண்டிற்கான பணியகத்தின் வருமானம் ரூபா 1,444 மில்லியனாகும். இது 15.7 சதவீத அதிகரிப்பைப் பிரதிபலிக்கின்றது. அதேவேளையில், மீளாய்வாண்டின் வர்த்தகத் தொடர்புடைய மற்றும் சந்தைப்படுத்தல், மேம்பாட்டு நடவடிக்கைகள் மீதான செலவினம் முன்னைய ஆண்டின் தொகை ரூபா 697 மில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா 968 மில்லியன் ஆகும். இது 39 சதவீத அதிகரிப்பைச் சுட்டிக் காட்டுகின்றது.

3.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

சில குறிப்பிடத்தக்க விகிதங்கள் பின்வருமாறு.

உரிமை மூலதன விகிதம்	நியம விகிதம்	2012	2011	2010
நடைமுறை விகிதம்	2:1	2:84	3:28	2:47
விரைவு விகிதம்	1:1	2:83	3:25	2:45

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின்போது ரூபா 876 மில்லியன் வர்த்தகத் தொடர்புடைய செலவின் ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும், எதிர்பார்த்தவாறு சுற்றுலாப் பயணிகளின் வருகை அமையவில்லை. விபங்கள் கீழே தரப்படுகின்றன.

நாடு	2012		2011	
	ஏற்பட்ட மொத்தச் செலவினம்	சுற்றுலாப் பயணிகளின் வருகையில் வளர்ச்சி	ஏற்பட்ட மொத்தச் செலவினம்	சுற்றுலாப் பயணிகளின் வருகையில் வளர்ச்சி
	ரூபா	%	ரூபா	%
ஐக்கிய இராச்சியம்	101,492,242	7.7	113,372,372	0.6
ஜேர்மனி	39,246,721	28.2	43,302,313	22.2
பிரான்ஸ்	20,545,444	16.8	20,016,035	55.6
ரஷ்யா	25,927,841	32.8	30,991,787	61.1
நெதர்லாந்து	4,044,308	11.6	7,186,800	34.2
இந்தியா	9,812,701	2.9	835,974	35.1
சீனா	345,319,913	58.1	12,859,576	56.4

ஜப்பான்	15,923,952	26.7	8,018,073	43.7
மத்திய கிழக்கு நாடுகள்	30,521,920	-0.3	14,153,406	53.2
மலேசியா	இல்லை	35.3	இல்லை	20.4
சுவிற்சலாந்து	இல்லை	42.1	இல்லை	49.7

(ஆ) வருகை தரும் பத்திரிகையாளருக்கான நிகழ்ச்சித்திட்டங்களும் பொதுவாக அறிந்துகொள்ளுதற்கான சுற்றுலா நிகழ்ச்சித்திட்டங்களும்.

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் போது மேற்படி நிகழ்ச்சித்தித் திட்டங்களுக்கு ரூபா 26.43 மில்லியன் செலவிடப்பட்டது. எவ்வாறாயினும், நாட்டிற்கு அதிகூடிய நலன்களை எய்தக்கூடியவாறான பொருத்தமான, சாதகமான பத்திரிகையாளர்களைத் தெரிவு செய்வதை வலியுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களது எண்ணிக்கை நிரலிடப்படாமையால் முறையான ஊடகத் தெரிவுத்திட்டங்களது அங்கொன்றும் இங்கொன்றுமாக இந் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) மீளாய்வாண்டின் போது 181 பத்திரிகையாளர்கள் 57 ஊடகங்களைப் பொதுவாக அறிந்து கொள்வதற்காக பங்குபற்றியிருந்தனர். எவ்வாறாயினும், எதிர்பார்த்த பலனை அடைவதற்குப் பத்திரிகையாளர்களை தெரிவு செய்யும் தெரிவு நியமம் தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) எதிர்பார்த்தவாறு, நிகழ்ச்சித்திட்டங்களினூடாக ஈடேற்றிய ஊடக பிரசுரங்கள் தொடர்பாகச் சான்றெதுவும் கணக்காய்விற்கு கிடைக்குமாறு செய்யப்படவில்லை.

4.2 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பணியகத்தின் 45 சதவீதத்திற்கு மேற்பட்ட பதவிகளில் வெற்றிடங்கள் நிலவின. மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் மனிதவளம் மீதான மொத்தக் கிரயம் முறையே ரூபா 28.6 மில்லியன் மற்றும் ரூபா 25.8 மில்லியன் ஆகவிருந்தன. மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டிலும் ஊழியர் ஒருவருக்கான கிரயம் முறையே ரூபா 622,400 மற்றும் ரூபா 562,874 ஆக இருந்ததை இது சுட்டிக்காட்டியது.

(ஆ) 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாத்துறை அதிகாரச் சட்டத்தின் VII ஆம் பிரிவின் பிரகாரம் தேவையை கருத்திற் கொள்ளாது பணியகத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தார்.

4.3 வாகனப்பாவனை

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது இரண்டு வாகனங்களை வாடகைக்குப் பெறுவதற்கு ரூபா 6,591,906 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. வாடகை வாகனங்களது கிலோ மீட்டர் ஒன்றிற்கான கிரயம் 56.32 ஆகும்.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் வாடகை வாகனக்கிரயம் ரூபா 4,237,828 அல்லது 180 சதவீதத்தால் அதிகரிப்புக்குள்ளாகியிருந்தது.

5. கணக்களிதகைமையும் சிறந்த ஆளுமையும்

5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பாதீடு தயாரிக்கப்பட்ட போதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 38 ஆம் இலக்கத்தின் 8(1) பிரிவின் பிரகாரம்

நிதியாண்டிற்கு 3 மாதங்களுக்கு முன்னரே சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் பாதீட்டிற்கும் உள்ளவற்றிக்கும் இடையே 22 விடயங்களில் 7 சதவீதம் முதல் 1331 சதவீதம் வரையிலான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படாமையை இது சுட்டிக்காட்டுகின்றது.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்.

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு நலிவுகள் நிதியதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் பணியகத்தின் தலைவருக்கு வழங்கப்பட்ட எனது விரிவான அறிக்கையின் மூலம் கவணத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) மேம்பாட்டு நடவடிக்கைகள்
(இ) பாதீடு
(ஈ) மனிதவள முகாமைத்துவம்
(உ) கொள்வனவு
(ஊ) உள்ளகக் கணக்காய்வு

எச். ஏ. எஸ். சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

A/Y

srilanka

WONDER OF ASIA

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம்

80, காலி வீதி, கொழும்பு 3, இலங்கை

துரித அழைப்பு: 1912

தொ.பேசி: +94 11 2437059-60 / +94 11 2426800

இணையத்தளம்: www.srilanka.travel

srilanka.travel/facebook

design & concept by tradlanka advertising